பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30-09-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:308

## குடாநாட்டுப் பயணத்துக்கான
# பாதுகாப்பு அனுமதி முறைக்கு
# எதிராக வழக்குத் தாக்கலாகும்!

## ஐ.தே.கட்சி தயாராகிறது

கொழும்பு,செப்ரெம்பர்30

யாழ்.குடாநாட்டுக்கு ஆள்கள் செல்லவும் பொருள்களை அனுப்பவும் பாதுகாப்பு அனுமதி பெறப்படவேண்டும் என்ற நடைமுறை விதிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இவ்வாரம் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகள் இந்த மனுவைத் தாக்கல் செய்வர் என்று அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் இவ்விடயம் குறித்து முடிவு செய்யப்பட்டதாக அறிய வருகின்றது.

இந்த வழக்கைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பை கட்சியின் பிரமுகர் சட்டத்தரணி டி.எம்.சுவாமிநாதனிடம் ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா?
# முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் முடிவில்லை!

கொழும்பு,செப்.30

அரசுக்கு எதிராக ஐ.தே. கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா, இல்லையா என்பது குறித்து தமது கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி ஆராய்ந்த பின்னரே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் குறித்து கட்சி உடனடியாக எந்த முடிவும் எடுக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புக் கவுன்ஸில் குறித்து
# ரத்னசிறியும் ரணிலும் விரைவில் சந்திப்பர்!

கொழும்பு,செப்.30

அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 17ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு அமைய அரசமைப்புக் கவுன்ஸில் ஒன்றை அமைப்பது குறித்து பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்னும் ஓரிரு தினங்களில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

17ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தின்படி நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களில் ஐவரை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து நியமிக்க வேண்டும்.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தில்
# திருமலை துறைமுகப் பாதுகாப்பு மேலும் பல மடங்கு அதிகரிப்பு

திருகோணமலை,செப்.30

திருகோணமலைத் துறைமுகம் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல்களை நடத்தலாம் எனப் புலனாய்வுத் தகவல்கள் தொடர்ந்தும் எச்சரித்து வருவதையடுத்து, துறைமுகத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான உயர்மட்ட மாநாடு கடந்த வியாழனன்று நடைபெற்றபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நாட்டின் முக்கிய நிலைகள்மீது தமது தாக்குதல் இலக்குகளைத் தீர்மானித்திருக்கும் விடுதலைப் புலிகள், அவற்றில் முதலாவதாகத் திரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை:
# யாழ். இந்து, பொஸ்கோ முன்னணிப் பெறுபேறு!

யாழ்ப்பாணம்,செப்.30

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.சென்ஜோண் பொஸ்கோ பாடசாலை ஆகியவை முன்னணிப் பெறுபேறுகளை ஈட்டியிருப்பதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் எஸ்.டினேஷ்சாந்த் 177 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் (தமிழ்மொழி மூலத்தில்) ஐந்தாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

சென்ஜோண் பொஸ்கோவில் 74 மாணவர்களும் (தோற்றியோர் 132), யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 71 மாணவர்களும் (தோற்றியோர் 156) சித்தியடைந்துள்ளனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா - வாஜ்பாய் தொலைபேசியில் பேச்சு!

கொழும்பு,செப்.30

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து இலங்கை - இந்தியப் பிராந்தியத்தில் எழுந்துள்ள நிலைமைகள் குறித்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் நேற்று தொலைபேசி மூலம் உரையாடினர் என்று இந்தியத் தகவல் ஒன்று தெரிவித்தது.

பிராந்திய மற்றும் சர்வதேச நிலைமைகள் குறித்துக் கருத்துப் பரிமாறிக்கொண்ட இரு தலைவர்களும் இத்தகைய விடயங்கள் தொடர்பாக பிராந்தியங்களின் தலைவர்கள் தமக்குள் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருவது அவசியம் என்று தமக்குள் ஒப்புக்கொண்டனர் என இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ)

# விகாரமாதேவிப் பூங்காவில் வெடிகுண்டு அங்கி நேற்று மீட்பு!

கொழும்பு,செப்.30

கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவுக்கு அருகில் அதிக சக்திவாய்ந்த தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பூங்காவின் பின்புற வாசலுக்கு அண்மையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இந்த அங்கியை, அங்கு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் பிற்பகல் 3 மணியளவில் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் உடனடியாகப் பொலீஸாருக்கு அறிவித்தனர். பொலீஸார் அந்த இடத்துக்கு விரைந்து அங்கியை மீட்டனர்.

ரி.4ரக வெடிமருந்து 9 கிலோவும், ஒவ்வொன்றும் சுமார் அரைக் கிலோ எடையுள்ள 3 வெடிப்பொருள்களும் அந்த அங்கியில் பொருத்தப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து நேற்றுப் பிற்பகல் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்திய பொலீஸார், அப்பகுதியில் வசித்துவரும் தமிழ் மாணவன் ஒருவனைக் கைது செய்து கடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயிருக்கு ஆபத்தான நிலையில்
# 26 இலங்கையர்கள் நேற்று பிரிட்டன் துறைமுகத்தில் மீட்பு

லண்டன்,செப்.30

சட்டவிரோதமான முறையில் லண்டனுக்குள் நுழைய முயன்ற 26 இலங்கையர்கள் லண்டனின் டோவர் துறைமுகத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

பெல்ஜியத்திலிருந்து வான் ஒன்றில் இவர்கள் 26பேரும் அடைக்கப்பட்டனர். பின்னர் அந்த வான் கப்பலில் ஏற்றப்பட்டு லண்டனின் டோவர் துறைமுகத்தில் வந்திறங்கிய சமயம் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். காற்றுப் புகமுடியாதபடி அடைக்கப்பட்டிருந்த அந்த வானில் - மிக நெருக்கமாக - சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் பயணம் செய்தமையால் மீட்கப்பட்ட அனைவரும் ஆபத்தான நிலையில் இருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி புதனன்று கூடுகின்றது

கொழும்பு,செப்.30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் எதிர்வரும் புதன்கிழமையன்று கூடி ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் கட்சித் தலைவர்கள் கூடி, தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும், நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்தும் ஆராய்வர் என்று பொ.ஐ.முன்னணியின் செயலாளரான அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார். (உ)

## வவுனியாவில் காவலரண் மீது கிரனேட் வீச்சு!

வவுனியா,செப்.30

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காவலரண் மீது தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, பொலீஸார் தாறுமாறாகச் சுட்டதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்ததாகவும் - அவர் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-4-164)

## வவுனியாவில் பெண் கைது!

வவுனியா,செப்.30

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் வசித்துவந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஆறு பிள்ளைகளின் தாயான இராசலிங்கம் பூபதி (வயது45) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த வாரமும் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுத் துறையினரால் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ஆசிக்குளம் பகுதியில் வசிக்கும் 6 பேரை எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பு கோட்டையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகம் அமைந்துள்ள நான்காம் மாடிக்கு விசாரணைகளுக்காக வருமாறு அவர்களுக்கு, கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன

(ம-1[illegible])

## காலியில் 17பேர் கைது!

கொழும்பு,செப்.30

காலியில் நேற்று பொலீஸார் நடத்திய தேடுதலின் போது 17 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## 116 இலங்கையர் யேமனிலிருந்து திருப்பியனுப்பப்பட்டனர்

படகுகள் மூலம் சட்ட விரோதமாக யேமன் நாட்டுக்குள் நுழைய முயன்ற சமயம் யேமன் நாட்டு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு துறைமுகத்தினுள் படகுகளிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்த 116 இலங்கையர்களை யேமன் அதிகாரிகள் நேற்று இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் நேற்று விமானம் மூலம் கட்டுநாயக்கா விமா

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### டாக்டர் தெய்வேந்திரன் விளக்குகின்றார்

# சுகாதார வைத்திய அதிகாரியை நியமிப்பது மாகாண ஆளுநரே!

## விலக்குவது முதல்வருக்குரிய விடயமல்ல

யாழ்ப்பாணம்,செப்.30

"என்னை நியமனம் செய்தது வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரே. எனவே என்னை விலக்குவதோ, நியமிப்பதோ யாழ்.மாநகர முதல்வருக்கு உரிய விடயமல்ல."

- இவ்வாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத் தொடரில் தனக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக தனது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றைய உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் மாநகர சபைக் கூட்டத்தில் உறுப்பினர் ஒருவரின் கருத்துக்கள் மற்றும் முதல்வரின் பதில் ஆகியவை சம்பந்தமாகப் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 11 வருடங்களுக்கு மேலாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியாக வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆளுநரினால் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றி வருகிறேன். இதுவரை ஆளுநர் எனது ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவில்லை. எனது ஒப்பந்தம் 31-12-2001 இல் முடிவுறுகிறது. நான் விரும்பினால் ஒப்பந்தத்தை ஆளுநரின் விருப்பத்துடன் நீடிக்கலாம்.

யாழ்.மாநகர முதல்வர் என் நியமனம் தொடர்பாக ஆளுநரிடம் தொடர்பு கொண்டு தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம். அதை விடுத்து என்னை நியமிப்பதோ, விலக்குவதோ முதல்வருக்கு உரிய விடயமல்ல.

எனவே 31.12.2001 வரையும் ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரியாக நான் என் கடமைகளைத் தொடர்ந்து செய்து வருவேன். இதைத் தடை செய்வதற்கு முதல்வர் பொலீஸாரின் உதவியை நாடுவதாகச் சொல்லியிருப்பதற்கு மக்களே பதில் சொல்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

சேவையைத் தடை செய்வது பொலீஸாரின் பணியல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முதல்வரும் அவரைச் சார்ந்தவர்களும் பொலீஸாரை நாடவேண்டிய நிலை துர்ப்பாக்கியமானதாகும்.

எனது சேவையைப் பற்றி விமர்சிக்க வைத்திய சேவை குறித்து நன்கு அறிந்தவரினால் மட்டுமே முடியும். சபை அங்கத்தவர் ஒருவர் இந்தத் தகைமை உள்ளவராக இருந்தால் அவரது விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

எனது சேவையை இதுவரை காலமும் பெற்ற மக்கள் குறிப்பிட்ட அங்கத்தவர்களுடன் தொடர்புகொண்டு இது குறித்து ஆவன செய்ய வேண்டும்.

தங்கள் பத்திரிகை ஊடாக உண்மை நிலையை மக்களுக்கு விளக்கி சேவைகள் தடைப்படாமல் இருக்க உதவுவது தங்கள் கடமை என்பதை வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அதிபர்களுக்கான கூட்டம்

வலி.வடக்கு,செப்.30

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அவசர கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

முக்கிய விடயங்கள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு

யாழ்ப்பாணம்,செப்.30

2000ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட அனைத்துத்துறை மாணவர்களிற்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ்.கன்னாதிட்டியிலுள்ள New Science Hall கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது என மாணவர் பிரதிநிதிகள்தெரிவித்தனர். (ம)

## யாழ்.இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர் விவரங்கள் வருமாறு:-

★ 177 புள்ளி - எஸ்.டினேஷ் சாந்த் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

★ 174 புள்ளி - பி.ரேகா (மகாஜனா)

★ 170 புள்ளி - செல்வி ஜி. நாகேந்திரன் (சுண்டிக்குளி மகளிர்)

★ 170 புள்ளி செல்வி ரி.அரவிந்தன்(உடுவில் மகளிர்)

★ 170 புள்ளி - ரி.கிருத்திகா (நீர்வேலி ஸி.ஸி.ரி.எஸ்.)

★ 168 புள்ளி - யூ.நிவேதிகா (சென்.ஜோண் பொஸ்கோ)

★ 168 புள்ளி - பீ.பானுஜன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

★ 167 புள்ளி - மஜனிதா (சென். ஜோண் பொஸ்கோ)

★ 166 புள்ளி - என்.திருத்தணிகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

★ 166 புள்ளி - கே.கோகுலன் (மகாஜனா)

இலங்கை முழுவதற்குமான தரநிலையில் இரு சிங்கள மாணவர்கள் 191 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளனர். அவர்கள் இருவரும் களுத்துறையைச் சேர்ந்தவர்கள்.

தேசிய மட்டத்தில் தமிழ் மொழி மூலம் தோற்றியோரில் முதல் பத்து இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

★ 186 புள்ளி - அமுதபவன் (இரம்பைக்குளம் மகளிர் ம.வி.)

★ 184 புள்ளி - இ.தமிருணி (மட்டக்களப்பு வின்சென் மகளிர்)

★ 183 புள்ளி - நிதுஷன்(கல்லடி மிகுந்தபுர விபுலானந்த வித்தியாலயம்)

★ 179 புள்ளி - கௌசிகன் (மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி)

★ 177 புள்ளி - எஸ்.டினேஸ்சாந்த் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

★ 177 புள்ளி - கிஸிலிட் மட்டக்களப்பு பெரியகல்லாறு விநாயகர் வித்தி.)

★ 176 புள்ளி - செல்வி எஸ். சுரேந்திரன்(கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)

(12ஆம் பக்கம் பார்க்க)


சிவமயம்

ஸ்ரீ கடையிற் சுவாமிகளது 110ஆவது குருபூசையும் அன்னதானமும்

இடம்:- கடையிற் சுவாமிகள் சமாதிச்சிவாலயம் வண்ணை நீராவியடி.

காலம்:- 01-10-2001 திங்கட்கிழமை

காலை 9.00 மணிக்குக் குருபூசை. மதியம் 12.00 மணி மகேஸ்வரபூசை.

*அனைவரும் வருகை தந்து கடையிற்சுவாமிகளது குருவருளைப் பெற்றுய்க.*

- பரிபாலன சபை.

(92824)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம

திருவருள் மிகு அன்னை காமாட்சியம்பாள்

ஆலய திருப்பணி நிதிக்காக நடத்தப்பட்ட

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு:- இல. 6411

2ஆம் பரிசு:- இல. 2392 3ஆம் பரிசு:- இல. 4801

ஆறுதல் பரிசில்கள்:

1) இல. 997 2) இல. 6506 3) இல. 950 4) இல. 1883 5) இல. 630

6) இல. 1265 7) இல். 1904 8) இல. 620 9) இல. 513 10) இல. 4049

பரிசிற்குரிய பற்றுச்சீட்டுகளைக் காட்டி பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும். மேற்படி பரிசில்கள் இன்று (30.09.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

(92820) - *காமாட்சியம்பாள் ஆலய பரிபாலன சபை.*


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பொன்னாச்சி

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி கந்தசாமி பொன்னாச்சி நேற்று (29-09-2001) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கந்தசாமியின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேசியா), சிதம்பரப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை மற்றும் இலட்சுமியார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்களகுமாரி (கொழும்பு), தேவராசா (சவூதி), சாந்தகுமாரி, வைத்திலிங்கம் (சுவிஸ்), ராசலிங்கம் (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி), செல்வராசா (லண்டன்), பாலகிருஷ்ணன் (கனடா), சந்திரகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவச்செல்வம் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (கணனி ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி, இணைப்பாளர் - IIS, சங்கானை), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

அ.பால்சுப்பிரமணியம்
(ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி,
இணைப்பாளர், IIS, சங்கானை)

*சுழிபுரம் மத்தி,*
*சுழிபுரம்.*

(C/18462)


NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

2001 A/L

பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு வினாவிடை வகுப்பு

பொது இரசாயனம்

திரு. சிவத்திரன் (B.Sc.)

ஆரம்பம்:- 01.10.2001

திங்கள் காலை 7.00 மணி.

(திங்கள், புதன்,வெள்ளி 7.00)

(92815)

ENGLISH SPOKEN & GRAMMAR

இடம்: கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)

BY: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்

திகதி: 03.10.2001

நேரம்: காலை 7.00 (புதிய நேரம்)

காலம்: திங்., புதன், வெள்ளி.

(C/18462)


# வாசகர் திருமுகம்

## கண்ணிவெடிகள்..... கவனம்....!

யாழ். குடாநாட்டின் பல இடங்களில் குறிப்பாக போர் நடைபெற்ற பிரதேசங்களில் உயிருக்கு ஆபத்தான வெடிபொருள்கள் இன்னும் இருக்கின்றன என்பதற்கு நாளுக்கு நாள் நடைபெறும் சம்பவங்களும் இவற்றினால் படுகாயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் பட்டியல்களும் சான்றாக அமைகின்றன. இவற்றைவிட படுகாயமடைந்தவர்களையும், உயிரிழந்தவர்களையும் யாழ்.ஆஸ்பத்திரியில் பார்க்கின்றபோது இத்தகவல் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சரசாலை, மட்டுவில், சாவகச்சேரி போன்ற பகுதிகள் உட்பட இன்னும பல - அதாவது ஏற்கனவே மக்கள் வசித்துக் கொண்டிருக்கும் இடங்களிலும் - மிதிவெடியால் படுகாயமடைவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக் கின்றன.

இவர்களில் பலர் எல்லாவற்றையும் இழந்தவர்கள். இத்தகையவர்கள் இருக்கின்ற - மிஞ்சிய - தப்பிய - ஒருசில பொருள்களையாவது எடுத்துவருவோம் என்ற எண்ணத்துடன் சென்று, இப்பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்கின்றனர். வாழ்க்கைக் கஷ்டத்தைக் குறைக்கப்போய் வாழ்நாள் முழுவதும் அல்லற்படவேண்டிய நிலைக்கு அவர்கள் உள்ளாகின்றனர். அவர்களின் கஷ்டம் அவர்களுக்குத்தான் தெரியும். இருப்பினும், ஒருசில உடைமைகளுக்காகச் சென்று அவற்றிற்கு ஈடாக காலொன்றைக் கொடுக்க முடியுமா?

எனவேதான் இந்த விடயத்தில் விழிப்புணர்வுடன் நடந்துகொள்வது அவசியமாகும். புதையுண்ட, அநாதரவான, கைவிடப்பட்ட (வெடி) பொருள்களின் மட்டில் மிக எச்சரிக்கையாக இருந்துகொள்வது வீணான உயிராபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள வழிசெய்யும்.

மேலும், பல இடங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் மிதிவெடி எச்சரிக்கை அடையாளங்களை எக்காரணம் கொண்டும் அகற்றக்கூடாது. அப்படிச் செய்வது இன்னும் பலருக்கு உயிராபத்தை ஏற்படுத்துவதற்கு ஒப்பானதாகும். அத்துடன் மிதிவெடி சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களைக் கேட்டு நடப்பது நாங்களாகவே பல பயங்கரச் சம்பவங்களை தடுத்து நிறுத்த உதவுவதாக அமையும்.

*யாழ்ப்பாணம்.* **செ.அன்புராசா.**

## இறையேசுவும், புலாலுண்ணாமையும்

28.09.2001ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையை வாசித்தேன். அதில் சாயிபாபா தொடர்பாக புலால் உண்ணாமை பற்றி "ஞானக்கதிர்" என்னும் பகுதியில் ப.சிவயோகசுந்தரம் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரைத தொகுப்பு பிரசுரமாகியிருந்தது.

அந்தக் கட்டுரைத் தொகுப்பில் கிறிஸ்து தொடர்பாகக் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் உண்மைக்கு மாறானதும், அபத்தமானதுமாகும். கிறிஸ்து ஜெருசலேம் தேவாலயத்தில் வியாபாரிகளைத்தான் துரத்தினார் என்று நற்செய்தி ஏடுகள் குறிப்பிடுகின்றனவே தவிர பலியிடுபவர்களை அல்ல. மற்றது 'மிருகங்களின் புலாலை உண்பவன் தன் சகோதரனின் தசையை உண்பதற்கு சமன்' என்று கிறிஸ்து பகர்ந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய வார்த்தைகள் எக்கட்டத்திலும் இறையேசுவினால் கூறப்படவில்லை. கிறிஸ்தவர்களின் புனித நூலான 'பைபிளி'லும் இவ்வாறு கூறப்பட்டிருக்கவில்லை. இத்தகைய அபத்தமான, உண்மைக்குமாறான புரட்டுக்கள் எமக்குப் புதியன அல்ல என்றாலும், இவை கிறிஸ்துவ சமூகத்தை மற்றையவர்கள் இழிவாக நோக்குவதற்கு இட்டுச் செல்லும் என நான் எண்ணுகின்றேன்.

ஒரு சிலர் தமது வாதத்தை நியாயப்படுத்துவதற்காக, மற்றைய மதங்களை - அதன் போதனைகளை மேற்கோள்காட்டும்பொழுது ஒரு தடவைக்கு பல தடவை ஆய்வு செய்த பின் எழுதுவதே சிறந்தது. இது இக்கட்டுரை ஆசிரியருக்கு மிக முற்றிலும் பொருந்தும் என நினைக்கின்றேன்.

இந்த ஆட்சேபனைக் கடிதம் புலாலுண்ணுதலை ஆதரித்தோ, எதிர்த்தோ எழுதப்படவில்லை. இறையேசுவின் நற்செய்தியும் போதனைகளும் கொச்சைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் நிகழாதிருக்கவுமே என்பதைப் புரிந்துகொண்டால் சரி.

*கொழும்புத்துறை.* **எம்.என்.ராஜா.**

## கடமை என்பது பணிப்புரைக்கமைவானதே!

16-09-2001ஆம் திகதிய உதயனில் 'விதண்டாவாதமல்ல' என்ற தலையங்கத்தில் வெளியான 'வாசகர் திருமுகம்' குறித்து ஓர் ஓய்வு பெற்ற அரச சேவையாளன் என்ற வகையிலும், அரச உயர் பதவி வகிக்கும் ஒருவருக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் புரிந்து கொண்டவன் என்ற வகையிலும் பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சம்பள நிலுவை வழங்கப்படவில்லையென வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் மீது பழி சுமத்துவது நியாயமற்றது. ஏனெனில் நீதிமன்றமோ, தனிப்பட்ட நபரோ நிலுவைகளை வழங்கச்சொல்லிப் பணிக்குமிடத்தும், கோருமிடத்தும் செயலாளர் தன்னிச்சையாகப் பணத்தினை வழங்கமுடியாது. காரணம் மேலதிகாரிகளின் பணிப்பினை எதிர்பார்த்தே அவரால் செயற்படமுடியும். இது, சம்பந்தப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியருக்குத் தெரியாதா?

நல்லூரானின் ஆலயக் கதவுகள் திறக்கும்போதுதான் கல்விச் செயலாளர் இங்கு வருவதாக குறிப்பிட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் வாசகர் திருமுகத்தில் தெரிவித்துள்ளார். ஏன் நல்லூர் ஆலயக் கதவுகள் ஏனைய காலங்களில் மூடியா இருக்கின்றன? பலமுறை கல்விச் செயலாளர் யாழ். வந்து சென்றுள்ளார். இதனையும் இந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் அறியாரா?

சகல செயற்பாடுகளுக்கும் செயலாளர் தனித்து பதில் கொடுப்பது முடியாத காரியம். அவரின் மேல் உயர் பதவியில் உள்ள பணிப்பாளர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் அனுமதியைப் பெற்றே இவரால் செயற்படமுடியும். செயலாளர் உடனடியாக செயற்பட்டு நடவடிக்கை எடுத்தாலும் அவரின் மேல் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் பதில் அனுப்பப்படாதவிடத்து செயலாளரால் நினைவூட்டல் கடிதங்கள் மட்டுமே அனுப்ப முடியும். எனவே செயலாளரால் தன்னிச்சையாகச் செயற்பட முடியாதென்பதை ஓய்வுபெற்ற ஆசிரியர் விளங்கிக்கொள்ளமாட்டார் போலும்.

பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை அங்கு கல்விகற்கும் சமகாலத்தில் ஆசிரியராகவும், பல்கலைக்கழக மாணவராகவும் செயற்படுதல் சட்டத்துக்கு முரணானதே. இவை பற்றிய முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்குக் கிடைத்தால் அமைச்சு பணிக்கும் பட்சத்தில் செயலாளர் இது குறித்து செயற்பட வேண்டியது கடமையே. இந்த விவகாரத்தில் யாருக்கும் பாகுபாடு காட்டமுடியாது. இதுவும் ஓய்வுபெற்ற ஆசிரியருக்குத் தெரியாதா?

எனவே சம்பந்தப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் போன்றவர்கள் ஒரு மனிதனின் தனிப்பட்ட தெய்வ வழிபாட்டைக் குறைகூறி நிற்பது - கொச்சைப்படுத்துவது - நியாயமற்றது. என்றே எண்ணத் தோன்றுகிறது.

*யாழ்ப்பாணம்.* **- வ.சிவனடி.**

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில்

# பயங்கரவாதத் தடைப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

நியூயோர்க்,செப்.30

பயங்கரவாதத்துக்கு நிதி உதவியும், பொருள் ஆதரவும் கிடைக்கும் அனைத்து வழிகளையும் உடனடியாக ஒடுக்கும்படி, எல்லா நாடுகளையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணைக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது.

அமெரிக்கா கொண்டு வந்த இந்தப் பிரேரணைக்கு நேற்றுமுன்தினம் கூடிய ஐ.நா.பாதுகாப்புச் சபை 15-0 என்ற விகிதத்தில் ஒருமனதாக ஒப்புதல் வழங்கியது.

இந்த ஐ.நா.தீர்மானத்தின்படி உலக நாடுகளில் -

பயங்கரவாத அமைப்புக்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட வேண்டும்.

அவற்றுக்குத் தரப்படும் எல்லா வகையான ஆதரவும், அடைக்கலமும் நிறுத்தப்பட வேண்டும்

உலக அரங்கில்

பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய உளவுத் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டும்.

இந்தப் புதிய விதிகளை பின்பற்றத் தவறும் நாடுகள் மீது தடைகள் விதிக்கவும் தீர்மானம் வழிசெய்கிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் உரையாற்றிய ஐ.நா.பாதுகாப்புச் சபைத் தலைவர் ரிவ் டேவிட் லெவிகி -

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கை என்று கூறினார்.

இதேசமயம், பயங்கரவாத அமைப்புகள் எவை என்பதை இந்தத் தீர்மானம் வரையறுத்துக் காட்டத் தவறிவிட்டதாகவும் -

விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு ஒசாமா பின்லேடனே காரணம் என்ற அமெரிக்காவின் கருத்து கேள்வியற்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் - குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. (ஒ)

# உணவு விடுதியில் பற்றிய தீயில் 12 பேர் உடல்கருகி மரணம்!

## காஷ்மீரில் சோகச் சம்பவம்

ஸ்ரீநகர்,செப்.30

காஷ்மீரில் உணவு விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உடல் கருகி இறந்தனர். மேலும் பலர் பலத்த தீக்காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீநகரிலிருந்து 85 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள சோப்பூரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் இந்த விபத்து இடம்பெற்றது.

உணவு விடுதியில் முதலில் தீப் பிடித்ததாகவும் -

அதனை அணைக்க முன்னர் உணவு விடுதியைச் சுற்றியிருந்த வீடுகளுக்கும் தீ பரவியதாகவும் - அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று மாலைவரை இடிபாடுகளுக்கிடையில் இருந்து கருகி, உருக்குலைந்த நிலையில் 9 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் - தீ மூண்டதற்கான காரணம் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ)

## பெண் செய்தியாளர் ஆப்கானிஸ்தானில் கைதானார்!

காபூல்,செப்.30

ஆப்கானிஸ்தானுக்குள் சட்ட விரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் பிரிட்டிஷ் ஊடகவியலாளர் ஒருவரை தலிபான்கள் கைது செய்துள்ளனர்.

இவோன் ரெஸ்கி என்ற பெண் ஊடகவியலாளரே தலிபான்களால் கைது செய்யப்பட்டவராவார். (ஒ)

## இந்தியாவில் தடைசெய்யப்பட்ட

# இஸ்லாமிய மாணவர் அமைப்பினர் தமிழ்நாட்டுப் பொலீஸாரால் கைது!

சென்னை,செப்.30

இந்தியாவில் மத்திய அரசால் தடைசெய்யப்பட்ட இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்டோர் தமிழகத்திலும், கேரள மாநிலத்திலும் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் அனைத்து அலுவலகங்களும் மூடி 'சீல்' வைக்கப்பட்டன.

இதேவேளை - இந்த அமைப்பைத் தடை செய்வதற்கான உறுதியான ஆதாரங்கள் எதனையும் மத்திய அரசு வெளியிடவில்லை என்றும் -

ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக மத்திய அரசு சொன்னால் மட்டும் போதாதென்றும் - தலைமறைவாகியுள்ள இந்த அமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் வெளியிட்டதாகக் கூறப்படும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.



இந்தியாவில் இஸ்லாமிய மாணவர் இயக்கம் தடைசெய்யப்பட்டதை அடுத்து உத்தரபிரதேச மாநிலம் பழைய லக்னோவில் பெரும் வன்முறை வெடித்தது. வன்முறையை அடக்க பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் இருவரின் சடலங்கள் வீதியில் கிடப்பதைப் படத்தில் காணலாம்.

இதற்கிடையில் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து பொலீஸாரும் வெடிகுண்டு நிபுணர்களும் மோப்ப நாய்கள் சகிதம் நீதிமன்ற வளாகத்தில் தேடுதல் நடத்தினர். ஆயினும் வெடிகுண்டுகள் எவையும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை.

இதேவேளை, தடைசெய்யப்பட்ட இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பினரால் அசம்பாவிதச் சம்பவங்கள் எதுவும் ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சத்தால் நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பைத் தடைசெய்வது குறித்து நீண்டகாலமாகவே மத்திய அரசு ஆலோசித்து வந்ததாகவும் -

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் எழுந்துள்ள சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி அந்த அமைப்பு தற்போது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் - அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பையில் மதக்கலவரங்கள் உட்படப் பல வன்முறைகளுக்குக் காரணம் எனக் கூறப்படும் சிவசேனை போன்ற தீவிர இந்துத்துவ அமைப்புகள் தடைசெய்யப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஒஸாமா பின்லேடனின் அல்குய்டா அமைப்பு, பலஸ்தீன தீவிரவாத இயக்கமான ஹமாஸ் உட்படப் பல தேசவிரோத சக்திகளுடன் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் தொடர்புகொண்டுள்ளதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக இந்திய அரசு கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் -

இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் தடை செய்யப்பட்டது குறித்து பரிசீலிக்கத் தீர்ப்பாயம் ஒன்று அடுத்த 30 நாள்களுள் அமைக்கப்படும் என்றும் - அதில் அந்த அமைப்பு தனது நிலையை விளக்கலாம் என்றும் - மத்திய உள்துறைச் செயலர் கமல் பாண்டே கூறியுள்ளார். (ஒ-7)

## தலிபானுடன் பேச்சு நடத்த

# பாகிஸ்தானிய மதத் தலைவர்கள் கந்தகார் போய்ச்சேர்ந்தனர்

கந்தகார்,செப்.30

தற்போதைய நெருக்கடியைத் தீர்க்கும் வகையில், இஸ்லாமியத் தீவிரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிடும்படி கோரி ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் அரசுடன் பேச்சு நடத்தச் சென்றுள்ள பாகிஸ்தானிய மதத் தலைவர்களின் குழு, நேற்றுமுன்தினம் கந்தகார் போய்ச் சேர்ந்துள்ளது.

இப்போது ஆப்கானிஸ்தானுடன் இராஜாங்கத் தொடர்பு வைத்துள்ள ஒரே நாடு பாகிஸ்தான் மட்டுமே என்பதால், அந்நாட்டுக்கான தலிபான் தூதர் முல்லா அப்துல் சலாமும், மதத் தலைவர்களுடன் கந்தகார் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு காரணமானவர் என்று கூறப்படும் ஒசாமா பின்லேடனை அமெரிக்காவிடமோ அல்லது சர்வதேச அமைப்பு ஒன்றிடமோ விசாரணைக்காக ஒப்படைக்கும்படி பாகிஸ்தானிய மதத் தலைவர்கள் தலிபான்களிடம் வலியுறுத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானிய மதத்தலைவர்களின் இந்த முயற்சி தோல்வியடைந்ததாகப் பிந்திக் கிடைத்த உறுதி செய்யப்படாத செய்திகள் தெரிவித்தன. (ஒ-7)

## பின்லேடன் நிகழ்த்தவுள்ள

# மற்றொரு பாரிய தாக்குதல் குறித்து பிரிட்டன் எச்சரிக்கை

லண்டன்,செப்.30

இஸ்லாமியத் தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் நிகழ்த்தவுள்ள மற்றுமொரு தாக்குதல் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக பிரிட்டன் எச்சரித்துள்ளது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ, பின்லேடனின் தாக்குதல் தொடர்பான பிரிட்டனின் எச்சரிக்கையை நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

தலிபான்களின் ஆதரவாளர்களை, சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜி படையினருடன் ஒப்பிட்ட பிரிட்டிஷ் அமைச்சர், அவர்களுடன் பேசுவது சாத்தியமற்ற ஒன்று என்றும் வலியுறுத்தினார்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள நாடுகளில் பிரிட்டனும் ஒன்று எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆயினும், ஓசாமா பின்லேடனின் அடுத்த தாக்குதல் பற்றிக் கிடைத்த தகவல்களை வெளியிட மறுத்துவிட்ட அமைச்சர் ஸ்ரோ, கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார். (ஒ-7)

# காங்கிரஸ் கட்சி தலைமையில் தமிழகத்தில் மூன்றாவது அணி

சென்னை,செப்.30

தமிழகத்தில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் தலைமையில் மூன்றாவது அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகிய காங்கிரஸ் கட்சி மூன்றாவது அணிக்குத் தலைமை வகிக்கிறது.

இந்த அணியில், முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரத்தின் காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை, மக்கள் தமிழ் தேசக்கட்சி, புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சி ஆகியன இடம்பெற்றுள்ளன.

உள்ளாட்சித் தேர்தல்களில் வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் சாதி அடிப்படையிலான ஆதரவு ஆகியவை முக்கிய இடம் பெறுவதாகவும் -

ஆகவே, காங்கிரஸ் தலைமையிலான மூன்றாவது அணி, நடக்கவுள்ள உள்ளாட்சித் தேர்தல்களில் கணிசமான வெற்றிகளைப் பெறும் என்றும் - தமிழகக் காங்கிரஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-7)

## அடுத்தமாதம் நடைபெறவுள்ள

# சென்னை மேயர் பதவித் தேர்தலில் மு.க.ஸ்டாலின் மீண்டும் போட்டி!

சென்னை,செப்.30

சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கான தேர்தலில் கருணாநிதியின் மகனும், சென்னை மேயருமான மு.க.ஸ்டாலின் போட்டியிடுவார் என்று தி.மு.க. அறிவித்துள்ளது.



முன்னதாக சென்னை மேயர் பதவிக்கான தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று மு.க.ஸ்டாலின் கூறிவந்தார்.

கருணாநிதி கைது செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னரும், வெற்றி வாய்ப்புக் குறித்த சந்தேகத்தால் மேயர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட ஸ்டாலின் தயக்கம் காட்டி வந்தார்.

தற்போது நீதிமன்றத் தீர்ப்பினால், முதல்வர் பதவியிலிருந்து ஜெயலலிதா விலக்கப்பட்டதன் காரணமாகவும் -

காங்கிரஸ் தலைமையில் மூன்றாவது அணி தேர்தலில் களம் இறங்கியுள்ளதால், அ.தி.மு.க. கூட்டணியின் வாக்குகள் சிதறும் என்ற நம்பிக்கையாலும் - ஸ்டாலின் மேயர் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாகக் கருதப்படுகிறது. (ஒ-7)

# தேர்தல் இட ஒதுக்கீட்டில் த.மா.காவினர் அதிருப்தி

சென்னை,செப்.30

தமிழகத்தில் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் தமிழ் மாநில காங்கிரஸுக்கு முறையான இடங்கள் ஒதுக்கப்படவில்லை என்று அக்கட்சித் தொண்டர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

த.மா.காவுக்கு 25 சதவீத இடங்களை அ.தி.மு.க. வழங்கியுள்ளது. இதில் 13 சதவீத இடங்கள் மட்டுமே த.மா.காவுக்கு வெற்றி வாய்ப்புள்ள - அக்கட்சி விரும்பிக் கேட்ட - இடங்களாகும். மீதி 12 சதவீத இடங்கள் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்புள்ள இடங்களாகும். இதனால் த.மா.காவினர் அதிருப்தியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைமையில் அமைந்துள்ள மூன்றாவது அணியில் த.மா.கா. இணைந்து உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை அக்கட்சிக்குள் வலுவடைந்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

# மண் பரிசோதனை நிலையத்தை இயக்குவதற்கு நிதிஉதவி போதாது

## ஆய்வுகூட இரசாயனங்கள் தேவை

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்டத்தில் புதிதாக நிறுவப்படவுள்ள மண் பரிசோதனை நிலையத்துக்கென 30 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் விரைவில் கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளதாக விவசாய ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 30 லட்சம் ரூபா நிதியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியிருந்தார்.

ஆயினும் குறிப்பிட்ட நிதியில் உபகரணங்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டன. பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆய்வுகூட இரசாயனங்கள் நிதி போதாத காரணத்தினால் கொள்வனவு செய்யப்படவில்லை என்றும் —

போதியளவு இரசாயனங்களைக் கொள்வனவு செய்து வைப்பதன் மூலமே பரிசோதனைகளை ஒழுங்காக மேற்கொள்ள முடியும் என்றும் —

அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இன்னும் 30 லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்படும் பட்சத்தில் பரிசோதனை நிலையத்துக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் என்பனவற்றை முழுவதுமாகக் கொள்வனவு செய்ய முடியும்; அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டால் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் மண் பரிசோதனை நிலையம் இயங்கத் தொடங்கிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-ரி)

## சனசமூக நிலைய நன்கொடை நிதி

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளதாகவும் —

எனவே மேற்படி நிதியைப் பெறுவதற்காக ஏற்கனவே விண்ணப்பப் படிவங்களைப் பெற்றவர்களை உடனடியாக பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளரிடம அவற்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச சபைத்தலைவர் அ. ஜோன்சன் கேட்டுள்ளார். (க-7)

## பயிற்சி வகுப்பு

சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் ஆடு, மாடு, கோழி, வளர்ப்பில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளது.

மாதகல் மயில்வாகனப்புலவர் சனசமூக நிலையத்திற்கு அருகிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரியின் கிளைச் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றின் பராமரிப்பு, நோய்த்தடுப்பு உட்பட மற்றும் பல விடயங்கள் பற்றி பயிற்சிகள் வழங்கப்படும். சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச. சுப்பிரமணியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இப்பயிற்சியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் சண்டிலிப்பாய், டச்சு வீதியில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது மாதகல் மயில்வாகனப் புலவர் சனசமூக நிலையத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## பாலுணவு வழங்கும் திட்டம்

இடம்பெயர்ந்து வடமராட்சி, கரவெட்டிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ். மனித முன்னேற்ற நடு நிலையம்மீண்டும் பாலுணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகிறது. (ஐ-31)

## திருத்தம்

'கசிப்பு விற்ற 5 பேருக்கு அபராதம்' என்ற தலைப்பில் கடந்த வெள்ளியன்று உதயனின் 4 ஆம் பக்கத்தில் பிரசுரமான செய்தியில் முதலாம் பந்தியில் ''பல்வேறு கசிப்பு வழக்குகள் தொடர்பாக'' என்று பிரசுரமானதை ''பல்வேறு கசிப்பு வழக்குகள் மற்றும் அரச சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்த வழக்குகள் தொடர்பாக'' என்று திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

# பாலியல் வன்முறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

## நாவலப்பிட்டியில் வெள்ளியன்று நடந்தது

கொழும்பு, செப். 30

தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாவலப்பிட்டி நகரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஊர்வலமும் நடத்தினர்.

நாவலப்பிட்டியில் அண்மையில் உமாதேவி என்ற தமிழ் யுவதி ஒருவர் இனந்தெரியாதோரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டன.

'தமிழ்ப்பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையா? காவல்துறையே உடனடி நடவடிக்கை எடு!' 'பாலியல் வன்முறையில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்து!' என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் வைத்திருந்தனர். (ஐ-7)

## நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரம்

அரியாலை, செப். 30

இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரம் முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய நிவாரணப் பொருள்களை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கி வருகின்றனர். (ஐ-17)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,
உதவிப் பதிவாளருமாகிய

### லயன் இரா. இராஜேஸ்வரன்


அவர்கள், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306B. மாவட்ட கழக அபிவிருத்தி, விரிவாக்கல் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்திக்கான மாவட்டத் தலைவராக நியமனம் பெற்றமை குறித்து அவரைப் பாராட்டுவதுடன், மேன்மேலும் உயர்வுகள் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
மனோகரா, அல்வாய். (92807)



## நெஞ்சம் நெகிழும்

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி **செ. சுஜாத்தா** (சாவகச்சேரி, இந்துக் கல்லூரி O/L மாணவி)

அமரர் **க. செல்வராசா** (உரிமையாளர் - உதயன் மரக்காலை)

செல்வி **செ. யசோதா** (சாவகச்சேரி, மகளிர் ம.வி. உயர்தர உயிரியற் பிரிவு மாணவி)

மண்ணுலகில்:
1977-07-20 1954-12-18 1976-06-29

விண்ணுலகில்: 1993-09-28

திதி:- 2001-09-30

ஆண்டுகள் எட்டு ஆனாலும் எம் ஆறாத்துயர் நீங்கவில்லை!
நீண்டநாள் சென்றாலும் நம் நினைவு மட்டும் அகலவில்லை!
மாண்டு நீர் மடிந்தீரோ? மண்ணுலகை மறந்தீரோ?
மீண்டும் நீர் வருவீரோ? எம் வேதனையைத் தவிர்ப்பீரோ?
தூண்டிலில் துவளுகின்ற துள்ளு மீன் போல் இங்கே
துவண்டுயாம் துடிக்கின்றோம் துயர் பொறுக்க முடியவில்லை!
ஆண்டவன் அடி நீழலில் ஆறுதல் நீர் அடைவீரே?
ஆறாமை யாமிங்கு அழுது நாம் புலம்புகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி செ. மங்கையர்க்கரசி (கொழும்பு). (சி/18433) மகன் செ. உதயன் (கனடா).



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் ந. ஜெகன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னையா நல்லதம்பி

அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக மாணவர்கள்
(B. Com-ii, B. A.-ii)
பட்டப்படிப்புகள் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(92797)



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 — 02 — 1973

மறைவு 30 — 09 — 1996

### அமரர் சண்முகநாதன் சிவகுமார்

எத்தனை யுகம் சென்றாலும்
எந்தன் மகனே சிவகுமாரா!
சித்தம் தனிலே உன்னை நினைத்திடுவோம்,
பெற்ற வயிறு துடிக்குதடா
பிரிவுத் துன்பம் கொடுமையடா
சிவனார் பார்த்திருந்து ஆத்மசாந்தி
பெற்றிடுவாய்.
ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
அம்மா, அத்தான், அக்கா.
தங்கை, மச்சான், தம்பி, மருமக்கள்.

சபாபதிப்பிள்ளை வீதி.
உடுவில், கிழக்கு, சுன்னாகம். (92787)

உதயன்

## மண் பற்றிய எண்ணம் அவசியம்

"யாழ்ப்பாணம் ஒரு கல்வித் தொழிற்சாலையாக மாறியுள்ளது. எமது மாணவர்களுக்கு இங்கு கல்வியூட்டப்பட்ட பின் அவர்கள் 'ஏற்றுமதி' செய்யப்படும் அவல நிலைமையே இங்கு காணப்படுகின்றது."

- இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கின்றார் யாழ்.பல்கலைக்கழக நிதியாளர் க.கனகரத்தினம்.

யாழ்ப்பாணத்தின் உயர்ந்த கல்விக் கூடங்களுள் ஒன்றான வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த முக்கிய நிகழ்வான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இந்தக் குறிப்பை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

உயர்தரக் கல்வியைக் கற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களை அவர்களின் பெற்றோர்கள் உடனடியாகவே வெளியிடங்களுக்கு அனுப்ப வைக்கின்றனர் என்றும் -

வேலைவாய்ப்பு, திருமணம் போன்ற காரணங்களுக்காகவும் கணிசமான எண்ணிக்கையானோர் வெளியிடங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்றும் -

அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு எமது இளம் சமுதாயம் வெளிநாட்டுக்கு 'ஏற்றுமதி'யாகும் நிலைமை ஏற்பட்டதற்கு அந்த இளம் சமுதாயத்தையோ அல்லது அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் அவர்களது பெற்றோர்களையோ நாம் குறைகூறிப் பயனில்லை.

நாட்டு நிலைமையும் இங்குள்ள சூழ்நிலைமையுமே பெற்றோர்களையும் இளைஞர்களையும் இந்த முடிவுக்கு வரத்தூண்டுகின்றன என்பதே உண்மை.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் ஒன்றிரண்டு சதவீதத்தினருக்கே பல்கலைக்கழக அனுமதி கிட்டுகின்றது. ஏனையோர் தங்களுடைய அடுத்தகட்டக் கல்வி அல்லது வேலை வாய்ப்புக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலைமை குடாநாட்டில் உள்ளது.

தகுந்த உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான வசதிகள் இங்கு இல்லை. தவிரவும் யுத்தப் பாதிப்புகள் பற்றிய பீதி வேறு. இக்காரணங்களால் தகுந்த, பொருத்தமான வாய்ப்புக்களைத் தேடிப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அனுப்புகின்றனர். யுத்த பூமியிலிருந்து தமது பிள்ளைகள் வெளியேறுவது அவர்களுக்கு மேலும் பாதுகாப்பானது என்றும் பெற்றோர்கள் கருதுகின்றனர்.

அத்தோடு, வெளிநாட்டில் - வெளியிடங்களில் - வாழும் நமது முந்திய தலைமுறை அங்கிருந்து வெளிநாட்டு செலாவணியில் அனுப்பும் பணமும் இங்குள்ள மக்கள் மத்தியில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'பிள்ளை வெளிநாட்டுக்குப் போனால் நன்றாகப் படிக்கலாம்; நன்றாக உழைக்கலாம்; ஊருக்குப் பெருமளவு பணம் அனுப்பலாம்; எதிர்காலம் நன்றாக இருக்கும்; அத்தோடு அவர்களுக்கும் நல்ல பாதுகாப்பு' - இப்படியான சிந்தனை நமது பெற்றோர்கள் மத்தியில் ஊறிப்போயிருக்கின்றது. இத்தகைய சிந்தனை இருக்கும்வரை இளைஞர்களை ஏற்றுமதி செய்யும் கல்வித் தொழிற்சாலையாக குடாநாடு விளங்கும் நிலைமையை நாம் மாற்றவே முடியாது.

இதற்குத்தான் நம் மனதில் நல்ல மனமாற்றம் வேண்டும் என்கிறார் நிதியாளர் கனகரத்தினம்.

இது எங்களுடைய மண், எங்களுடைய தேசம் என்ற உணர்வு எல்லோருக்கும் வரவேண்டும். அப்படி வந்தால் தான் யாழ்ப்பாணப் பாரம்பரியம் கேள்விக்குறியாகும் நிலைமையிலிருந்து நாம் விடுபடமுடியும் என்று அவர் கூறுவது நமது சமூகத்தில் ஒவ்வொருவரும் கவனத்தில்கொள்ளவேண்டிய விடயமாகும்.

உயர்கல்விக்காக வெளிநாடு செல்வது தப்பில்லை. அந்தக் கல்வி வசதியை இங்கேயே நாம் வழங்கக்கூடிய நிலை வரும்வரை அக்கல்விக்காக - அதனைத்தேடி - நாம் அங்கு போவதில் தவறில்லை.

ஆனால் அக்கல்வியைப் பெற்ற பின், எமது தாய் மண்ணை மறந்து - இந்த மண்ணுக்காக உழைக்க வேண்டிய சமூகக் கடமையைத் துறந்து - வசதியான வாழ்வுக்காகவும், உழைப்புக்காகவும் அந்நிய மண்ணிலேயே தஞ்சம் புகுவது தான் வேதனையான - தவறான - விடயம்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்ற பாரதி வாக்கிற்கு இணங்க, மேற்படிப்புக்காக, பயிற்சிக்காக வெளிநாடு செல்லும் நமது சமூகத்தவர்கள் அங்கு கற்கவேண்டியவற்றைக் கற்று, பட்டறிவோடு நமது மண்ணுக்குத் திரும்பி நம் மண்ணை விருத்தி செய்தால் காலப்போக்கில், கல்வித் தொழிற்சாலையாக இயங்கி, இளம் சமுதாயத்தை ஏற்றுமதி செய்யும் தொழிலை குடாநாடு மறக்கும் நிலை ஏற்படும்.

வெளிநாடு சென்ற - வெளிநாடு செல்கின்ற - நம்மவர்களின் காதுகளில் இந்தக் கருத்து விழுமா?

# சேக்கிழார் அடிப்பொடிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம்

## யாழ்.பல்கலைக்கழகம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.பல்கலைக்கழகம் தனது 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழகத்தின் முதுபெரும் சைவசித்தாந்தப் பேரறிஞரான சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரனுக்கு "கௌரவ இலக்கிய கலாநிதி"ப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தி.ந.இராமச்சந்திரனுக்கு கௌரவ பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பார்.

சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணியான தி.ந.இராமச்சந்திரன் சிறந்த மொழிபெயர்ப்பாளர், சிறந்த தமிழ், ஆங்கிலப் பேச்சாளர். அது மட்டுமன்றி சேக்கிழார் பெருமானையே தன் குருவாகக்கொண்டு போற்றி ஒழுகுபவரும் கூட. இதனால்தான் அவரை சேக்கிழார் அடிப்பொடி என அழைப்பர்.

இந்தவார முற்பகுதியில் யாழ்ப்பாணம் வந்துசேரும் இவர், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து சேர்.பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப்பேருரையை நிகழ்த்துவார்.

### கபடி பயிற்சி முகாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் கபடி பயிற்சி முகாம் விரைவில் நடத்தப்படவுள்ளது. இப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களின் நலன் கருதி இந்தப் பயிற்சி நடத்தப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர்.மோகனதாஸ் தெரிவித்தார். (ஐ-135)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மூவரின் நினைவுப் பேருரைகள்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு வருடாந்தம நடத்தப்படும் நினைவுப் பேருரைகள் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்குப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை இடம்பெறும். பேராசிரியர் சபா.ஜெயராசா 'சைவசித்தாந்தக் கல்வியும் பரதநடனமும்' என்ற தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சேர்.பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப்பேருரை இடம்பெறும். தமிழக அறிஞரான சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன் 'பெரிய புராணத்தில் சமுதாய சிந்தனைகள்' என்ற தலைப்பில் நினைவுப்பேருரையை நிகழ்த்துவார்.

எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுப் பேருரை இடம்பெறும். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பாலச்சந்திரன் 'ப.:றுளி ஆறும் பன்மலையடுக்கமும்' என்ற தலைப்பில் நினைவுப்பேருரையை வழங்குவார். (ஐ-7)



யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கணனிப் பயிற்சிநெறி அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரும் தெல்லிப்பழை பிரதேச செயலருமான திருமதி ப.திலகநாயகம் கணனிப் பயிற்சிக் கூடத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

# 'சஜிந்த' கப்பலில் வரும் மா கூ.சங்கங்களுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 'சஜிந்த' கப்பல் மூலம் தருவிக்கப்படவுள்ள மா நாளை திங்கட்கிழமை ப.நோ.கூ.சங்கங்களுக்கு, அவற்றின் ஒதுக்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்படும் மாவை உடனடியாகவே ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, ப.நோ.கூ.சங்கங்கள் தத்தமது லொறிகளுடன் நாளை திங்கட்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேருமாறு சமாசம் அறிவித்துள்ளது. (ஐ-17)

### நாளை

புரட்டாதி 15
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தசி
மாலை 5.50 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 8.17 வரை
நடேசர் அபிஷேகம்
சுபநேரம்: 12.02 - 1.32
ராகுகாலம் : 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

### இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.30

வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பொதுவான நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் அனைவரும் வருகைதந்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

### உதயவாக்கு

புகழ் அற்ற வாழ்க்கையை விட மதிப்புள்ள மரணமே சிறந்ததாகும்.

## நாட்டு நடப்பு

ஆனையும் கூட அறுகினில் சிக்கி
அவதியுற்று நிலமிசை வீழும்
ஏனைய எறும்பும் காதினில் புகுந்து
வேளத்தை விரட்டும் உள்ளிருந்து
வானையும் கடந்து விசும்பினை அளந்த
வல்லவன் என உரைக்கும் வல்லரசு
சேனைகள் இன்றி 'ஒஸ்மா லேடன்'
செய்ததோர் சிறுமதி செயலால்
ஊனையும் மற்று உறக்கமும் விட்டு
உலையுதே அமெரிக்க நாடு!

*- விகடகவி.*

## கல்வி வலயங்களுக்கு இடையே

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூவருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த 3 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வலய ரீதியான இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன

நாளை முதலாம் திகதியில் இருந்து இந்த இடமாற்றங்கள் நடைமுறைக்கு வருவதாக மாகாணக கல்வியமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஏ.நாகேந்திரன் யாழ்ப்பாணம் வலயத்துக்கும் -

தென்மராட்சி கல்வி வலயத்தைச சேர்ந்த ஆர்.பாலகிருஸ்ணன் வடமராட்சி வலயத்துக்கும் -

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த எஸ்.சுரேந்திரன் தீவக வலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-10)

# கொழும்புப் பகுதியில் 17 தமிழர்கள் கைது!

கொழும்பு நகரப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பொலீஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 17 தமிழர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 12 இளைஞர்களும், 5 யுவதிகளும் அடங்குவர். இவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். கொழும்பில் 47 இடங்களில் திடீர் சோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜெராட் இக்னேஷியஸின் பணிப்புரையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேல் விசாரணைக்காக இவர்கள் தற்போது புறக்கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# யாழ்.மணிக்கூண்டுக் கோபுர திருத்த வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், செப்.30

யாழ்.மணிக்கூண்டுக் கோபுர திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து அதற்குரிய நான்கு பாரிய மணிக்கூடுகளும் எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன.

கோபுரத் திருத்த வேலைகள் யாவும் யாழ்.மாநகரசபையால் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது வர்ணம் பூசும் பணி மட்டுமே எஞ்சியுள்ளது.

இந்நிலையில் பிரித்தானிய அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்தப் பாரிய மணிக்கூடுகள் விரைவில் எடுத்துவரப்பட்டு கோபுரத்தில் பொருத்தப்படவுள்ளன. இவை குறிப்பிட்ட நேர இடைவெளியில் ஒலி எழுப்பும் (Alarm Sound). அத்துடன் மின் விநியோகம் தடைப்பட்டாலும் கூட இவை சாதாரணமாகச் செயற்படக் கூடியவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மணிக்கூண்டுக் கோபுரத் திறப்பு விழா நவம்பர் மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரிட்டிஷ் நாட்டின் பிரதிநிதிகள் உட்படப் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை -

மணிக்கூண்டுக் கோபுரம் அமைந்துள்ள பகுதியில் வேம்படி வீதி மற்றும் மணிக்கூண்டுக் கோபுர வீதி ஊடாகப் பயணம் மேற்கொள்ள பொதுமக்களுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. (ஐ-9)

### கண்ணிவெடிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கண்பொத்தி கண்ணாமூச்சி
விளையாடும் கண்மணிகாள்
கண்மறைவாய் காத்திருக்கும்...
விளையாட்டை வினையாக்கும்...
கண்ணிவெடிகள் கவனமாயிரும்
விழிப்புடனிருந்தால் தப்பிடுவீர்!

## சத்துணவு பெறும் மாணவர் விவரம்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படவிருப்பதால் தரம் ஒன்றில கல்வி பயிலும் மாணவர்களின் விவரங்களை நாளை திங்கட்கிழமை வலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-117)

## யாழ். பொலீஸ் நிலையப் பகுதியில் வாய்க்கால்கள் துப்புரவு செய்வதில் ஊழியரின் சிரமம் குறித்து பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.பொலீஸ் நிலையப் பகுதியில் உள்ள வாய்க்கால்களில் போடப்பட்டுள்ள தடுப்புகள் காரணமாக அந்தப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.ஜீவரெட்ணம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் முதல்வர் என்.ரவிராஜ் தலைமையில் சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது - மழைகாலம் நெருங்குவதனால் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வாய்க்கால்களை மிகவும் தூய்மையான முறையில் பேண வேண்டும் என்று முதல்வர் என்.ரவிராஜ் கொண்டுவந்த பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.பொலீஸ் நிலையத்தை அண்டிய வாய்க்கால் பகுதியினுள் இரும்புத் தடுப்புகள் பல நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவற்றை தினமும் அகற்றி துப்பரவு செய்து முடிப்பதற்கு ஏராளமான ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். இந்த வாய்க்கால் ஊடாக எதிரிகள் ஊடுருவாமல் தடுப்பதற்காகவே தடுப்புகள் இடப்பட்டுள்ளதாக பொலஸ் தரப்பில் கூறப்படுகின்றது - என்றார்.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலைய அத்தியட்சகர் என்.சி.குடாஹெட்டியுடன் தொடர்புகொண்டு சாதகமான பதிலைப் பெறமுனைவதாக முதல்வர் என்.ரவிராஜ் உறுதியளித்தார். (க-9)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 - 07 - 1976



இறப்பு 30 - 06 - 2001

### அமரர் தில்லையம்பலம் ஜெயமோகன்

(ராசன்)

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்
பிரிந்து மூன்று மாதங்கள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் மாறாது! மறையவே மறையாது!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

- சின்னண்ணா குடும்பத்தினர்.
(வசந்தன்)

(92779)

## கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஆளும் கட்சி முன்னாள் எம்.பி. கைது

குருநாகலில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கெக்கிராவையில் வைத்துப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுர மாவட்ட முன்னாள் எம்.பியான ஜானக் மகேந்திர அதிகாரி என்பவரே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

சம்பந்தப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தில் இருந்து 4 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டது தொடர்பாக இந்த முன்னாள் எம்.பியும் மற்றும் மூவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நால்வரும் அடுத்தவாரம் பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஜானக் மகேந்திர அதிகாரி 1988 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராயும் 1994 ஆம் ஆண்டு பொ.ஐ.முன்னணி வேட்பாளராயும் போட்டியிட்டு எம்.பியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். கடந்த பொதுத் தேர்தலில் இவருக்கு பொ.ஐ.முன்னணி சந்தர்ப்பம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)


Baraka

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை



ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பார்மசிகளிலும் கிடைக்கிறது.

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்.

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.
No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.

Distributor in Jaffna,
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

Fax : 676546
E-Mail : expocom@sri.lanka.net
Web site : www.barakaoil.com

(C/18286)


## 6ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

உதயம் 04 - 09 - 1984



அநியாய அழிப்பு 22 - 09 - 1995

### செல்வி தவராஜா துஷ்யந்தினி (துஷி)

(யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவி)

திதி: திரயோதசி (30.09.2001)

ஆறு வருடங்கள் பறந்தோடிப் போனாலும்
பண்புமிகு மகளே உன்பாசமுகம் மறப்போமா?
நீ இருந்த வாழ்நாளில் நிம்மதியாய் வாழ்ந்தோம்
நீ இல்லாத உலகினிலே நிதம்கலங்கி நிற்கின்றோம்!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா
அக்காமார் (கௌரி, பவா)
தம்பி (பிரதி)
அண்ணா (பிரபா - U.K)

நியூ கௌரி ரெக்ஸ்,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(92760)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.30

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் கிழக்கு கிராம அலுவலர் எஸ்.சூரியகுமார், மனோன்மணி சனசமூக நிலையத் தலைவர் ந.ஐங்கரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.30

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜனும் கௌரவ விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும் கலந்துகொள்வர். (க-3)

## உள்ளூராட்சி பணியாளர்களுக்கு பயிற்சி நெறி

யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 4, 5, 8, 9, 11 ஆகிய திகதிகளில் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.

ஒக்ரோபர் நான்காம், ஐந்தாம் திகதிகளில் 'உள்ளூராட்சி மன்றங்களின் பொது முகாமைத்துவமும் கணக்கீடும்' என்னும் பயிற்சி நெறியில் செயலாளர், கணக்குப் பதிவாளர்கள், கணக்கு எழுதுநர்கள், வருமான உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றுவர்.

ஒக்ரோபர் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் வருமானப் பகுதி எழுதுநர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கான சேவைக்காலப் பயிற்சியும் -

ஒக்ரோபர் பதினொராம் திகதி 'மக்கள் பங்களிப்பு' பற்றிய பயிற்சி நெறி செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் நடத்தப்படவுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார். (ஐ-117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1948 - 09 - 04



இறப்பு 1999 - 09 - 23

### அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

திதி: 30.09.2001 திரயோதசி

எங்கள் அன்பு ஐயாவே!
வீட்டுக்கு குல விளக்காய் விளங்கி
ஊருக்கு உத்தமனாய் விளங்கி
விண்ணுலகை அடைந்து
ஈராண்டுகள் ஆகிவிட்டனவே!
கோடி ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சம் உங்கள் நினைவுகளுடன் வாழும்!

மீளாத் துயருடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

எருவன்,
கொடிகாமம்.

(92730)


கூட்டுறவு - நாட்டுயர்வு

புங்குடுதீவு -நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

புனரமைக்கப்பட்ட கிராமிய வங்கியும் மேல்மாடிக் கட்டடத் திறப்பு விழாவும் 'கூட்டுறவுத் தீபம்' வெளியீடும் - 2001

காலம் :- இன்று (30.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி.
இடம் :- சங்க மாநாட்டு மண்டபம்
தலைவர் :- லயன் டாக்டர் க.இராஜரெட்ணம் J.P.

பிரதம விருந்தினர்: திரு.க.சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.செ.கு.சண்முகநாதன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்.)
திரு.எஸ்.கனகசபாபதி
{கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)}
திரு.எஸ்.கணேசமூர்த்தி
{(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை,தென்னை வளம்)}
திரு.ந.மதனராஜா
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தீவக அமைப்பாளரும், யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும்)
திரு.ப.விக்கினேஸ்வரன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்)
திரு.ந.கருணாகரகுருமூர்த்தி
(தலைவர், வேலணை பிரதேச சபை)

கௌரவிருந்தினர்கள்
திரு.செ.இரத்தினம்
(பிரதேச செயலர், தீவுப்பகுதி தெற்கு - வேலணை)
திரு.ஜே.எக்ஸ்.செல்வநாயகம்
(பிரதேச செயலர், ஊர்காவற்றுறை - நெடுந்தீவு)
திரு.சி.வீ.கே.சிவஞானம்
(தலைவர், கூட்டுறவுச் சமாசம்)

நூல் வெளியீடு:- "கூட்டுறவுத் தீபம்"
நூலை வெளியிட்டு வைப்பவர்
திரு.செ.கு.சண்முகநாதன்
(கூட்டுறவு உதவி ஆணையாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பணிப்பாளர்கள், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள்,
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.சங்கம்.

(C-18421)

# 'நீதி கேட்டாள் சோழ நாட்டாள்' - ஒரு நோக்கு

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கலாபூஷணம் நா.செல்லத்துரையின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட "நீதி கேட்டாள் சோழநாட்டாள்" என்ற நாடகம் பற்றிய விமர்சனம் இது. மேற்படி நாடக ஆசிரியர் (நெறியாளர்) தனது 50 ஆவது நாடகத்துறை அனுபவத்தை அண்மையில் கொண்டாடினார்.**

'நீதி கேட்டாள் சோழநாட்டாள்' என்ற ஓரங்க நாடகம் கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரையின் (நவாலியூரான்) சிறந்த நாடகப் படைப்புக்களில் ஒன்றாகும்.

அவருடைய கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பல்வகை (சமூக-இலக்கிய - புராண - நவீன) நாடகங்களைப் பார்த்து ரசித்திருக்கிறேன். குறிப்பாக, கண்டி மாநகரில் பிரபல்யமான திரித்துவக் கல்லூரியில் (TRINITY COLLEGE) அவர் கடமையாற்றிய காலத்தில், தான் கடமையாற்றிய தனது கல்லூரியிலும் - வேறு பாடசாலைகளிலும், பல்வேறு கலாமன்றங்களின் சார்பிலும் பல நாடகங்களை பல்வேறு மட்டங்களில் அவர் தயாரித்துள்ளமை குறிப்பிடக்கூடியதாகும்.

அதே நிலையில் அவர் யாழ்ப்பாணம் வந்ததும் நாடகக் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டிருப்பதுடன் மட்டுமல்லாமல் புதிய புதிய நாடக உத்திகளையும் புகுத்தி நாடகத்துறைக்கு மெருகூட்டி வருவது கண்கூடு.

இந்நாடகத்திலும் அவர் பொது மக்களின் ரசனைக்குரிய உத்திகளைக் கையாண்டுள்ளார். இதில் இடம்பெற்றுள்ள முழுவிசைப் போட்டிகள், நடனக் காட்சிகள் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட காட்சிகளாகும். 'நீதி கேட்டாள் சோழநாட்டாள்' என்ற இந்த நாடகப் படைப்பானது, மக்கள் மத்தியிலே மிகவும் பரிச்சயப்பட்ட சிலப்பதிகாரத்தின் வழக்காடு காதையினைச் சித்திரிக்கின்ற கருவாகும்.

அதை இவர் ஓரங்க நாடகமாக்கியதுடன் அவருடைய படைப்பினூடாக ரசிகர்களை நாடகத்துடன் ஒன்றிக்கச் செய்து, நாடக நிகழ்வுகளுடன் இரண்டறக் கலக்கின்ற சூழ்நிலையினை ஏற்படுத்தி விடுவதும் அவருடைய கலைத்திறனுக்குச் சான்றாக அமைகிறது. நவாலியூரானின் இந்த நாடகம் நவரசங்களும் பொதிந்த முழுமையான போக்குடையதாகும்.

நாடகத்துறையில் மிகவும் கடினமான ஒன்றெனக் கருதப்படுவது காட்சியினூடே பாத்திரங்களை நடமாடவிட்டு, ஒரு சினிமாப் பாணியிலான ஜனரஞ்சகத்தை ஏற்படுத்துவதாகும். நவாலியூரானின் 'நீதி கேட்டாள் சோழநாட்டாள்' அத்தகைய ஒரு ஜனரஞ்சகத்தை ஏற்படுத்தி, எந்தவித பிசகுமில்லாமல் வெற்றி கண்டுள்ளமைக்கு, தயாரிப்பாளரான அவரின் கைவண்ணமே காரணம்.

துல்லியமான - பொருத்தப்பாடுடைய பின்னணி வயலின் இசையுடன் திரை விலகி, ஆரம்பமாகும் இந்நாடகம், ஒரு மணி நேரம் எந்தவிதத் தடங்கல்களோ - பிசறுகளோ இன்றி ஓடுவதோடு, ஆற்றொழுக்குப் போல, சம்பவத் தொடர்புகளும் நிகழும். இவை நாடக அமைப்புக்குரிய ஒழுங்குகள், வரலாற்றுச் சான்றுகளைப் பகர்வனவாக - சூழலைச் சித்திரிக்கும் தன்மையதாக இருந்தன.



நீதி கேட்கும் சோழநாட்டாள்

கதாபாத்திரங்களின் ஊடாட்டம் மிகக் கச்சிதமாக - அவையினரின் பார்வைக்குத் தடங்கல் இல்லாததாக - அமைந்திருந்தது. பாடல்கள் தகுந்த பின்னணியுடன், சம்பவத்துக்கு உரிய முறையில் அமைந்தன. எந்த நிலையிலும் பின்னணி இசை நிகழ்ச்சியோட்டத்துக்கு இடையூறின்றி, பார்வையாளர்கள், அப்பின்னணியை அரங்கிலே நிகழும் ஒன்றெனக் கருதக் கூடியவாறு அமைக்கப்பட்டிருந்தது. இது இயக்குநரான நவாலியூரானின் அரங்கவியல் சார்ந்த திறமையாகும்.

இந்த நாடகத்தின் இறுதிக் கட்டமாகிய அந்த நிகழ்வு, பார்வையாளரைப் பரவசப்படுத்தி, அவையில் ஒருவித நிகழ்ச்சிக் கிளுகிளுப்பை ஏற்படுத்திவிட்டது. அதாவது பாண்டிய மன்னனின் அரண்மனையைப் பொதுமக்கள் ஆவேசங்கொண்டு எரிக்கும் காட்சி - பொற் கொல்லனை, வேகும் தீயில் பொது மக்கள் தள்ளி விழுத்தும் காட்சி - தேவர்களாகிய இந்திரன், வருணன, காமன், யமன் ஆகியோர் மதுரையின் காவலை உதறித் தள்ளிவிட்டு வெளியேறும் காட்சி ஆகியன அற்புதமாக அமைந்து, பார்த்திருந்த அவையோரைக் கொள்ளைகொண்டு விட்டன.

நவாலியூரானின் நாடகத்தில் பாத்திரங்கள் எப்பொழுதும் தகுந்த முறையில் அமைந்துவிடுவது அவருக்குரிய லாவகமாகும். அன்றும் இன்றும் பெண் பாத்திரங்களுக்கு உரியவர்களாகப் பெண்களையே தெரிவு செய்வார். அதற்குக் காரணம் நவாலியூரான் கையாளுகின்ற அரங்க அமைப்பின் கட்டமைப்பாகும். பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் எந்தவித விரசமோ அருசையோ ஏற்படாதவாறான இயக்க நிலைகளாகும்.

இந்த நாடகத்திலும் பாண்டிய மன்னனுக்கும் கண்ணகிக்கும் ஏற்படுகின்ற வழக்குரையில், கண்ணகிக்கும் பாண்டியனுக்கும் இடையிலான உரையாடல்கள் - முகபாவனைகள் 'அப்ளாஸ்' வாங்கிவிட்டன.

பாண்டியன் உயிர் துறப்பதும் பாண்டிமாதேவி அதைத் தாங்க முடியாது உயிர் விடுவதும் பார்வையாளரைக் கண்கலங்க வைத்துவிட்டன. அதைத் தொடர்ந்து அரங்கில் தோற்றுவிக்கப்பட்ட பின்னணிக் காட்சிகள், அவையோரைப் பரவசப்படுத்துகின்றன. பின்னர், கண்ணகியின் கோபப் பொறி கக்கும் உணர்வுபூர்வமான வசனத்துடனும் நடிப்புடனும் இரண்டறக் கலந்து சபையே கிளர்ந்தெழுகின்றது போன்ற நிலையில் நாடகம் நிறைவு பெறுகிறது. இது எழுத்தாளர் - இயக்குநர் - தயாரிப்பாளர் நவாலியூரானின் செல்வாக்குக்குட்பட்ட அம்சம் எனக் கொள்ளலாம்.

**செ.சதானந்தன்**
**அதிபர்**

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின் கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை (நவாலியூரான்) அவர்களின் ஓரங்க நாடகமான 'நீதி கேட்டாள் சோழநாட்டாள்', நாடக வரிசையில் சிறந்த நாடகங்களில் ஒன்றாகவும் - ஜனரஞ்சகமான சோடை போகாத நிகழ்வாகவும் - எந்த விதத்திலும் பார்வையாளருக்கு அலுப்போ, சலிப்போ ஏற்படாத ஒரு நாடகமாகவும், அலங்காரமான (A Colourful production) நாடகம் என்று பார்வையாளர்கள் வர்ணித்த நாடகமாகவும் - நவாலியூரானுக்கு ஒரு வெற்றி நாடகமாகவும் அமைந்ததென்றே குறிப்பிட வேண்டும். ☆




# கலையாட்டம் அல்லது உருவேறிய நடனம்

கலையாட்டம் அல்லது உருவேறிய ஆட்டம் என்று சொல்லப்படும் இந்தக் கலையானது இறைவன் பக்தன் மேல் ஏறி ஆட்டுவிக்கும் ஓர் நடனமாகும். இது மிகவும் பழங்காலந்தொட்டே எமது மக்களின் தெய்வீக உணர்வினையும் அதனுடன் இணைந்த கலை உணர்வினையும் எடுத்தியம்பும் சிறப்பு மிக்கதாக விளங்கிவருகிறது. இந்நடனமானது சாஸ்திரிய நடனத்துக்குள் இடம் பெறாது தமிழர்களுடைய கூத்து மரபுரீதியாக வளர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகிறது.

தனக்கென ஓர் அமைப்பு முறையினைத் தழுவியோ அல்லது ஒரு குருவின் மூலமோ பயிலப்படாத ஆட்டலாகவும் இது விளங்குகிறது. இதன் போது இசைக்கப்படும் இசைப்பாடல்களும் கூட ஒரு வகையில் கிராமிய மெட்டுக்களைக் கொண்டு அமைக்கப்பட்டவைாகவே உள்ளன. இவற்றினை இசைப்பவர்கள் உடனுக்குடன் மெட்டமைத்து பாடல்களை இயற்றிப் பாடுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த நடனத்தில் அதிகமாக ஆர்மோனியக் கருவி இசைக்காகவும், டோல்கி, றபான், தாளம், கெஞ்சிரா, உடுக்கை போன்றன தாளத்துக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இசைப்பாடல்களின் முக்கியத்துவத்தினையும் மீறி தாளக் கட்டமைப்புக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆடப்படும் ஓர் ஆடல் வகையாகவும் இது விளங்குகிறது. பாடல்களின் பொருளுக்குரிய அபிநயம், முத்திரை, முகபாவம் என்பன இவற்றில் இடம் பெறாமல் தாளங்களை முக்கியத்துவமாக்கி அதன் மூலம் கால்களினால் அவற்றினைச் சொல்வதில் இதில் கவனம் செலுத்தப்படும். இதை ஆடும் கலைஞர்கள் திறமை மிக்கவர்கள். உடுக்கையின் ஒலி உயர்ந்து ஒலிக்கும் போது இவர்கள் மிக உக்கிரமான ஆடல் ஆடுவர்.

ஆடலின் உத்வேகம் குறையக் குறைய ஒவ்வோர் தாளவாத்தியங்களின் ஒலிகளும் குறைவடைந்து சென்று முடிவடைகிறது. இவ் ஆடல் அரங்கத்தின் உள்ளே இடம் பெறாது வீதிகளில் அதாவது இறைவன் உலா வரும் வீதிகளில் பக்தி வசப்பட்டு ஆடப்படுவதால் தெருக்கூத்து எனும் வகைக்குள்ளேயும் இதனை அடக்கலாம். எனினும் வேறு எவ்விதக் காரணங்களும் கருதப்படாமல் பக்தி ஒன்றையே கருப்பொருளாக வைத்து கோயில்களில் அதிகமாக ஆடப்படுவது இதன் ஒரு சிறப்பாகவே அமைகிறது.



கலை ஆட்டத்துக்குப் பாட்டிசைப்போர்

நமது ஊர்த் திருவிழாக்களின் போது இதனை நாம் கண்டுங் காணாமலும் சாதாரண விடயமாகவே கருதிச் செயற்படுகிறோம் இன்னும் சிலர் இதனை ஒருபடி மேலே பொய்மைப் படுத்தியும் வருகின்றனர். எவ்வாறு இருப்பினும் எம்மவரில் ஒரு பகுதியினர் இந்நடனத்தைச் சுற்றி எந்நேரமும் இருந்து கொண்டேதான் இருக்கின்றனர். ஒரு வகையில் கேலிக்கைப் படுத்தப்படும் இவ்வாட்டத்தில் ஏதாவது 'உண்மை இருக்கிறதா'? என அறிவதற்காக அண்மையில் நல்லூரில் நடந்த தீர்த்தோற்சவத்தின் போது இடம்பெற்ற உருவாடலைக் காணச் சென்றேன்.

அங்கு அதிகமான இசைக் கலைஞர்கள் மத்தியில் ஒரு பெண்ணும் இரு ஆண்களும் உரு ஆடிக்கொண்டிருந்தனர். ஆண்களில் ஒருவர் 'அனுமக் கலை எனப்பட்ட கலையாடலினை ஆடினார். இவர் துள்ளித் துள்ளி ஆடிக கொண்டிருந்த போதிலும் கைகள் இரண்டையும் பாம்பு போல முத்திரை காட்டி ஆடியதையும் அவதானிக்க முடிந்தது.

மற்றைய ஆண் பத்மாசனத்தில் அமர்ந்திருந்து அருளாட்சி செய்யும் அமைப்பில் ஒரு கையை அபயகர முத்திரை பிடித்த வண்ணம் தன்மேல் மண்ணைக் கொட்டி ஒரு சிறு கோவண ஆடையுடன் அமர்ந்திருந்தார். இடையிடையே தன்னை மறந்து உரக்கச் சிரித்துக் கொண்டும் இவர் இருந்தார்.

அவரை அணுகிக் கேட்டபோது யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகளை விசர்கள் எனக் கேலி செய்த "கோட் சூட்" போட்டவர்கள் பின்னர் தமக்கே பைத்தியம் எனத் தெரிந்து கொண்டார்கள். அவ்வாறே என்னைப் பார்த்த சிரிக்கும் - நினைக்கும் இந்த மக்கள் கூட்டத்தினை எண்ணித்தான் நான் சிரிக்கிறேன் என்றார்.

"உருவேறிய நிலையில் நீங்கள் வேறு, உள்ளிருந்து ஆட்டுவிக்கும் ஒரு மேலான பொருள் வேறாகும் என அறிந்து கொள்கறீகளா?" என வினவிய போது "இல்லை, இறைவன் வேறு நான் வேறல்ல ஆத்மா ஒருவனே" என அவர் பதில் அளித்தார்.

ஆடிக் கொண்டிருந்த பெண்ணை அணுக முடியாது இருந்தது. நேரம் சென்றுகொண்டே இருந்தது. அவர் 2 மணித்தியாலங்கள் வரை தொடர்ந்தும் ஆடிக்கொண்டே இருந்தார். எமக்குப் பக்கத்தில் நின்ற மருந்துக் கடை, நகைக்கடையில் தொழில் புரியும் இளைஞர்கள் இருவர் இதனைத் தொடர்ச்சியாகக் காணவந்து தாம் அருள் பெறுவதாகவும், ஆட்டம் முடிவில் ஒரு சிலருக்கு கலையாடும் குறிப்பிட்ட நபர் திருநீறு பூசுவார் என்றும், அதனால் நினைத்த காரியம் வெற்றி பெறும் என்று தாம் நினைப்பதாகவும் என்னிடம் தெரிவித்தனர்.

டோல்கி, நபரின் ஓசை ஓங்கி ஒலித்தது. ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.

*"அன்பருக்கு அருள்வாய் நீ*
*ஐம்புலனின் அருமருந்யே*
*அழகனே அருள்வாய் நீ*
*வளர்மதி ஒளி தருவாயே"*

என்ற பாடல் வரிகள் பக்தி இன்பத்தைத் தந்து கொண்டிருந்தன. தாளக் கருவிகளின் கூட்டிசைக் கூட்டத்தினரைக் உருவேற்றிக்கொண்டிருந்தது.



அபயம் அளிக்கும் கலை ஆட்டம்

இசைக்கு இருக்கும் சக்தி அளப்பரியது. 'இசையால் வசமாகா இதயம் எது?' இசை என்பது மனிதனை இசைவிக்கும் ஆற்றல் மிக்கது. எனவே அந்த சக்தியால் அதனால் கவரப்பட்டு ஒரு மெய்மறந்த நிலையில் இவ்வாடல் ஆடப்படுகின்றதா என்ற சந்தேகம் எனக்கு எழாமலும் இல்லை.

இசையால் முகத்திலே இன்பமே ஏற்படும். பக்தி சார் இசையால் சாத்வீகமும் முகத்திலே தேயஸ்ஸும் ஏற்பட வாய்ப்புண்டு. எனினும் அவ்வகை மாற்றங்களுக்கு எதிர் மாற்றம் தொனிக்கும் முகபாவத்தின் மூலம் எல்லோரும் சொல்வது போல இது தெய்வம் ஏறிய ஓர் இசைக் கூத்தாகும் என்றும் எண்ணக் கூடியதாக இருந்தது.

இறைவன் கூத்தாடுவது இந்து மதத்திலே ஒன்றும் புதிய கதையல்ல. கொடுகொட்டி, பாண்டுரங்கம் முதலான பதினொருவகைக் கூத்துக்களை இறைவன் ஆடியதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சங்ககாலத்திலே கொற்றவை எனும் போர்த் தெய்வத்தின் குழந்தையாக வேலன் வணங்கப்பட்டான். "கொற்றவைசிறுவ" என்று புறநானூற்றிலே வர்ணிக்கப்படும் இத்தெய்வத்தினை வழிபடும் மரபு நவீன கலையாட்டத்துடன் நெருங்கிய தொடர்பு உடையது.

சங்ககால மக்கள் கோபம் கொள்ளும் இத்தெய்வத்தினால் ஊர் அழிந்துவிடும் என்றும் இத் தெய்வத்திற்கு 'கள்' முதலான பானங்களைப் படைத்து ஒருவனை வேலனாக அலங்கரித்து அவனுக்கு கையில் வேலினைக் கொடுத்துப் படையல் செய்வா[illegible]

பின்னர் அவன்மே[illegible] வேலன் ஏறிவிட்டதா[illegible] அவன் சொலகேட்டு ஊரில் ஏற்பட இருக்கும் ஆபத்துக்கள், அதனை நிவர்த்திக்கும் வழிகளையும் அறிந்துகொண்டனர் என அறியமுடிகிறது. இதன்போது ஆடப்படும் ஒரு வகைக் கூத்தினையே 'வேலன் வெறியாடல்' என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**நாவுக்கரசி**
**நல்லூர்**

பக்தி வசப்பட்ட ஆண்டாளும் இந்நிலையையே பெற்றிருந்தாள். பக்தியின் கரைகடந்த நிலையில் ஆண்டாள் பகல் பொழுது இராப்பொழுது என்பனவற்றை அறிந்திருக்கவில்லை என்றும் சதா கூத்திடுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டமைக்கு அவரின் நாச்சியார் திருப்பாவை போன்ற இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். க.தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92655)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.3529, 2867. (92770)

இறைச்சிக்கோழி (BROILER) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பாதிக்கோழி உட்பட பெற்றுக் கொள்ளலாம். 1kg - 135/= தொடர்பு:- 30,நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (92754)

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.15. 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (92446)

இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 220/=. 1/4kg 60/=. தொடர்பு:- இல.227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (92757)

இறைச்சிக்கோழி (BROILER) விற்பனைக்கு உண்டு. 1kg 130/=. பாதிக கோழி உட்பட பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்தைக்கும் இடையில்) (92755)

## விற்பனைக்கு

வளர்ப்பு கலர்மீன்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஒட்டுச் செவ்வரத்தை இனங்களும் உண்டு. தொடர்பு: 40/17, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் பார்வையிடலாம்.)(92725)

3-P Motor - 25H, 15H, 10H, 7 1/2 H (starter உடன்), குசன் செற்றி, மேசைகள், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 7, டச்சு வீதி, உடுவில். (92780)

வளர்ப்பு மீன்களுடன் **(Gold Fish)** தொட்டியும், வீட்டுப் பாவனைப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- த.கந்தவேள் (சி.சேந்தன்) ஏழாலை மேற்கு, சுன்னாகம். (92794)

மலிவு விலையில் புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சி.தளையசிங்கம், இல.9, மணியம் கட்டட ஒழுங்கை, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (92800)

## வீடு வாடகைக்கு தேவை

காங்கேசன்துறை, பலாலி வீதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நான்கு பேர் கொண்ட ஆசிரியையின் குடும்பத்துக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: C.A.இமானுவேல், இல.22,மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (92792)

## தவறிவிட்டது

இல.28, சுப்பிரமணியம் வீதி, அரியாலையைச் சேர்ந்த வை.பஞ்சாட்சரத்தின் விசேட அ.அட்டை (இல. 0902013521) 22.09.2001 அன்று கோம்பையன் மணல் மயானத்துக்கும் வில்லூன்றிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். (92786)

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த தயாநிதி தனஞ்சன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0906029101), பாடசாலை அ.அட்டை என்பன சுன்னாகத்துக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல, 54, கரன் ரேடர்ஸ், கே.கே. எஸ். வீதி, சுன்னாகத்தில் ஒப்படைத்துதவவும். (92778)

## வீடு விற்பனைக்கு

யாழ்.வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில் இல.22A, வெள்ளாந்தெரு என்னும் முகவரியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு:- S.இரத்தினம், இல.201, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.2113. (92756)

## ஆசிரிய பயிற்சி நிலைய முகாமையாளர் பதவி

பருத்தித்துறை, செப்.30

வடமராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் முகாமையாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

இப் பதவிக்கு இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவர்கள் தங்கள் சுய விவரத்துடன் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

(ஐ-118)

## 'நதி' சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.30

யாழ்.செங்குந்த இந்துக்கல்லூரி மாணவர்களின் வெளியீடான 'நதி' மாணவர் சஞ்சிகையின் வெளியீட்டு வைபவம் நாளை திங்கட்கிழமை கல்லூரியில் நடைபெறவிருக்கும் 'முத்தமிழ்' விழாவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு கையெழுத்தில் பிரதியாக வெளிவந்த இச்சஞ்சிகை தற்போது முதல்முறையாக அச்சில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் இச்சஞ்சிகையை கல்லூரியின் 'முத்தமிழ்' மன்றம் வெளியிடுகிறது. (ஐ)

## சுழற்சி முறை கடன்

சண்டிலிப்பாய்,செப்.30

மாதகல் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் சுழற்சி முறையிலான சுய தொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் 35 பேருக்கு சுயதொழில் முயற்சிக் கடனை வழங்கியுள்ளது. விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற பல்வேறு சுய தொழில் முயற்சிகளுக்கு இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-135)


வண்ணார்பண்ணை காட்டுத்துறை

அருள்மிகு அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

மகாகும்பாபிஷேக - மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

01.10.2001 - திங்கட்கிழமை

காலை 10 மணி- யாகபூசை, மூலமூர்த்திக்கு திரவிய அபிஷேகம.

காலை 11 மணி- கும்பபிரதட்சணம் - தொடர்ந்து அஷ்டோத்தர சத சங்காபிஷேகம்.

மாலை 5 மணி - வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீ விநாயகப்பெருமான் பூந்தண்டிகையில் வெளிவீதி உலாவருதல் நிகழும்

வீதிகளாவன:

ஓட்டுமடம் வீதி, மானிப்பாய் வீதி, ஐயனார் கோயில் வீதி, கே.கே.எஸ். வீதி வழியாகக் கோயிலை அடைதல்.

பக்தர்கள் விநாயகப் பெருமானை வரவேற்று வணங்கி அருள்பெறுக.

(C/18453) - ஆலய அறங்காவலர்கள்.


# கண்டல், உவர் வளரிகள் பற்றி தமிழில் வெளியாகும் ஒரே நூல்

தொண்டமனாறு வெளிக்கள நிலையத் தலைவரும் ஓய்வுபெற்ற யாழ். இந்துக்கல்லூரி அதிபருமான கே.எஸ். குகதாசன் அவர்கள் தொண்டமனாறு நீரேரியிலும் அதனை அண்டிய பகுதியிலும் மேற்கொண்ட தாவர ஆய்வுகளின் விளைவாக உருவாக்கிய 'கண்டல்களும் உவர் வளரிகளும்' என்னும் நூலுக்கு மதிப்புரை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கண்டல்கள், உவர்வளரிகள் தொடர்பாக பல விஞ்ஞானக் கட்டுரைகளும், ஆராய்ச்சி வெளியீடுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்திருப்பினும் தமிழில் இதுவரை இல்லாது இருந்தது. இக்குறைபாட்டை இவர் நிவர்த்தி செய்து தமிழில் இதனை வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். நூல் ஆசிரியர், இலங்கையில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் தாராளமாகக் காணப்படும் இவற்றின் பயன்பாடு என்ற வகையில் விளக்கங்களை, தாவரவியலுக்கு உரிய முறையில் தந்திருப்பது ஏற்புடையதே.

உலகளாவிய ரீதியில் உள்ள கண்டல் சாதிகளின் பெயர்கள் நிரற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள கண்டல் இனங்கள் மற்றும் உவர் வளரிகளின் பெயர்களும் நிரற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் முன்னோடிகள், ஈட்டங்கள், ஊடுருவிகள், தற்செயலாகப் புகுந்தவை என்ற வகையிலும் விளக்கங்கள் தந்து தாவரங்கள் நிரற்படுத்தப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கைப் படங்கள் மூலம் இலங்கையில் கண்டல்களின் பரம்பல், யாழ்.குடாநாட்டில் பரம்பல், நாகர்கோயிலில் குறுக்குக்கோடு மூலம் பெறப்பட்ட கண்டல்களின் கிடையான பரம்பல், சில தாவரங்களின் புகைப்படங்கள் போன்ற விவரங்கள் நூலுக்கு


| | |
|---|---|
| நூலின் பெயர் | : 'கண்டல்களும் உவர் வளரிகளும்' |
| ஆசிரியர் | : கே.எஸ்.குகதாசன் |
| மதிப்பீடு | : திருமதி ஜெயராணி நந்தகுமார் |

சிரேஷ்ட விரிவுரையாளர்,
தாவரவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

நன்மைகளை, வடபகுதியில் அழிக்கப்பட்டுவரும் தன்மையை, இதனை அழியாது பாதுகாத்து, வளரவிட்டுப் பெருக்கவேண்டிய முக்கியத்துவத்தை சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய முறையில் சிறப்பாக எழுதி அமைத்துள்ளார். கண்டல்கள் மற்றும் உவர் வளரிகள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டவர்களுக்கு இது பெரிதும் பயன்படும்.

இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள தாவரங்களின் தமிழ்ப்பெயர், ஆங்கிலப்பெயர், தாவரவியல் பெயர், குடும்பம் போன்ற விவரங்களுடன், தாவரங்களை இனங்காணக்கூடிய வகையில் உருவவியல் பட விளக்கங்களும், விவரணங்களும் தரப்பட்டுள்ளன. சூழலில் இத்தாவரங்களை இனங்காண இவை பெரிதும் உதவும். தாவரவியல் கற்போர் மாத்திரமில்லாமல் ஏனையோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. தாவர விவரணங்களைப் பொறுத்தவரை தோற்றம், தண்டு, வேர், இலை, பூந்துணர், பூ, கனி, மெருகூட்டுவதாக அமைகின்றன. மேலும் கண்டல்களுக்குரிய சூழலில் காணப்படும் விலங்குகளை குறிப்பிட்டுள்ளதுடன், நாகர்கோயில் பிரதேச பறவைகளின் நிரலும் பயனுள்ளதாகும்.

அறிமுகத்தில் தரப்பட்டுள்ள கண்டல்களைப் பற்றிய பொதுவான விவரணம் ஆசிரியர்களுக்கும், மாணவருக்கும் பெரிதும் பயனுள்ளதாகும். சூழலியல் நோக்கில் இது ஆராயப்பட்டுள்ளது. இந்நூல் ஆண்டு 11 வரை விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், உயர்தர வகுப்புகளில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும். பல்கலைக்கழகத்தில் தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கும், மேலும் தாவரங்களில் ஆர்வமுள்ள பிறருக்கும் பயன்படும். உருவவியல் படங்கள் தெளிவாகவும், விளக்கமாகவும் இருப்பதுடன், எழுத்துக்களின் அச்சுப்பதிவும் தெளிவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தேவையான இடங்களில் எல்லாம் ஆங்கிலப் பதங்களும் தரப்பட்டுள்ளன. இறுதியில் உசாத்துணை




நூல்களும் தரப்பட்டுள்ளன. கண்டல்களும் மற்றும் உவர்வளரிகள் தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள் இந்நூலை ஒரு கையேடாகப் பயன்படுத்தலாம். இலங்கையில் உள்ள கண்டல்களையும் உவர்வளரிகளையும் இனங்காண இது உதவும். நூலாசிரியர் தனது உரையில் தொண்டமனாறு ஏரியில் தான் நிகழ்த்திய நீண்டகால ஆய்வுகளின் அனுபவத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார். அவர் குறிப்பிடும் அனுபவம் நூலில் தெளிவாகத் தெரிகிறது. இந்த அனுபவம் எதிர்கால சந்ததிக்குப் பயன்பட வேண்டும் என்பதே அவரின் நோக்கம்.

## நூல்விசை

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினரும் சேவை மனப்பாங்குடனேயே தமது பணிகளை ஆற்றுகின்றனர். இலாப நோக்கம் கருதாமல் இப்புத்தகத்தையும் வெளியிட்டுள்ளனர். நூலாசிரியரும் தனது உழைப்புக்குரிய தொகையை சேவை நோக்கில் விடுவித்து, அச்சிடச் செலவான தொகையை மாத்திரமே ஈடுசெய்யும் நோக்கில் புத்தக விலையை நிர்ணயித்துள்ளார். பிரதி ஒன்றின் விலை ரூபா 150 மாத்திரமே.

கிடைக்குமிடம்:

**K.S.Kugathasan,**
**President F.W.C**
**70/10, Arasady Road, Jaffna.**

## லயன்ஸ் கழகங்கள் நடத்தும் கண் பரிசோதனை

யாழ்ப்பாணம்,செப்.30

சாவகச்சேரி, இணுவில், மானிப்பாய் பரிஷ் மற்றும் கொக்குவில் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசனால் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு விழி வெண்படலத்தால் பாதிப்புற்றவர்களுக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

எஸ்.எம்.பெர்னாண்டோ ஸ்தாபனத்தினரால் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிப்போருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.

கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட முகாம்களில் இனங்காணப்பட்ட 'கற்றாக்' நோயாளர்களுக்கு இச்சிகிச்சையில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ,(ஐ-10)

## தவிட்டுக்குளம் புனரமைப்பு


சண்டிலிப்பாய்,செப்.30

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பண்டத்தரிப்பு தவிட்டுக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

அளவெட்டி பினாக்கை குளத்திலிருந்து புற்கள் உழவு இயந்திரம் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டு குளக் கட்டில் பதிக்கப்பட்டுள்ளன. குளம் ஆழமாக்கப்பட்டு புதிய மெருகுடன் காணப்படுகின்றது.

விரைவில் இக்குளத்தின் திறப்பு விழா நடைபெறவுள்ளது. (ஐ-135)


E.R.ரான்ஸ்போட் சேவிஸ்,
E.R.A.ஓடியோ,வீடியோ சென்ரர்
ஆதரவில்



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்
நடத்தும்
மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும்
பரிசளிப்பு விழாவும் - 2001

இடம்: திக்கமுனை மைதானம்
காலம்: இன்று (30.09.2001) ஞாயிறு பி.ப.3.30 மணி
தலைவர்: திரு.கு.இ.இராசநாதன் (பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்)
பிரதம விருந்தினர்: திரு.A.T.A.தேவராஜா (முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)

இறுதிப்போட்டி
வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம்
எதிர்
கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
செயலாளர்,
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.
(C/18437)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை

திருமதி இ.இரத்தினசோதி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நாகம்மா இராசையா

அவர்கள் 23-09-2001 அன்று இறைவனடி எய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள்,
(92791) யா/கரம்பகம் அ.த.க.பாடசாலை.

# அமைதியின் அறிகுறி ஆண்டவன்; அவனை அணுகி ஆறுதல் பெறலாம்

''பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே! எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்குஇளைப்பாறுதல் தருவேன்'' (மத்.11:28) என்பது ஆண்டவன் யேசு கூறும் ஆறுதலான வார்த்தைகள்.

நாம் இன்று பல்வேறுபட்ட பெருஞ்சுமைகளோடு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றோம். ஒரு புறம் போரும், அதன் கொடிய விளைவுகளான இடம்பெயர்வுகள், பொருளாதாரத் தடைகள், உறவுப் பிரிவுகள் போன்றன பெருஞ்சுமைகளாக எங்கள் வாழ்வை அழுத்திக்கொண்டிருக்க, மறுபுறம் தொழில் வாய்ப்பின்மை என்ற இளையவர்களின் ஏக்கங்கள்—

வெறுமையாகத் தோன்றும் எதிர்காலம் பற்றிய மாணவச் சந்ததியினரின் தாக்கங்கள், தம் பெண்பிள்ளைகளின் திருமண வாழ்வுக்காய் ஏங்கித் திரியும் பெற்றோரின் அலைச்சல்கள், ஆற்ற முடியாமலிருக்கும் நோய் நொடிகள், உளத்தாக்கங்கள், வறுமைக்குள் பிடிபட்டுள்ள மாணவர்களின் கல்வி பற்றிய ஏக்கங்கள், பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையே என்ற தவிப்புகள் போன்றன நம் தலைமேலிருந்துவருத்த—

இன்னொரு புறம், குடிகாரத் தந்தையர்களின் பொறுப்பில்லாத் தன்மைகள், மனைவி. பிள்ளைகளைச் சுமைகளுக்குள்ளாக்க, அவ்வாறே வரவுக்கு மீறிய செலவுக்குக் காரணமாயிருக்கும் தாய்மார்களின் உணர்ச்சியற்ற தன்மைகள், கணவன் பிள்ளைகளைச் சுமைகளுக்குள்ளாக்கும் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

இந்த நிலையிலேவாழ்க்கையிலே விரக்தி, வெறுப்பு ஏற்படுகின்றன. சோர்வு, ஆறுதலின்மை; அமைதியின்மை; நோவுகள். வருத்தங்கள் இவை எல்லாம் ஒன்று சேர்ந்து பெருஞ்சுமைகளாகத் தோளை அழுத்தும் நுகங்களாக எம் வாழ்வை அமுக்குகின்றன. இதனால் எழுந்து நிற்கமுடியாமல் வாழ்விலே கூனிக் குறுகிப் போய்விடுகின்றோம்.

இந்தச் சுமைகளைச் சுமப்பவர்கள் அப்பாவிகளே. இந்தச் சுமைகளைத் தாங்களே தங்களுக்கு மேலே வருவித்துக்கொண்டவர்கள் அல்லர். இவர்கள் யார் யாரோ இச் சுமைகளை இவர்கள் மேல் சுமத்திவிடுகின்றார்கள். எனவேதான் சுமை சுமந்து

**ஞாயிறு நற்பிரசாதம்**

சோர்ந்து போகிறவர்கள்மட்டில் ஆண்டவர் இரக்கம் கொள்கிறார்; அவர்கள் மேல் அன்பு கூர்கிறார்; ஆறுதல் கொடுக்கிறார்; அரவணைக்கிறார்; தட்டி எழுப்புகிறார்; புதிய வழிகளைத் திறந்துவிடுகிறார்; வாழ்வாக—வழியாக நின்று அவர்களை வாழ வைக்கின்றார்.

ஏனெனில் உடலை, உயிரை, வாழ்வை ஆண்டவன் மனிதனுக்குக் கொடுத்தது அவன் வாழவேண்டும் என்பதற்காகவே. சுமை சுமந்து சோர்ந்து போக வேண்டும் என்பதற்காக அல்ல. மனிதன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்; ஆரோக்கியமான நல்வாழ்வைக்கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகவே; வேதனைகள், துன்பங்களோடு நொந்துபோக வேண்டும் என்பதற்காக அல்ல.

எனவே எங்கள் தாயாகத் தந்தையாக, வழிகாட்டியாக, ஆசானாக இருந்து எம்மைப் படைத்துக் காத்துவரும் அவர், தம் பிள்ளைகளாகிய நாங்கள்சுமைசுமந்துசோர்ந்து போவதைக் கண்டு இரக்கம் கொள்ளாமல் இருப்பாரோ? சுமைகளை இறக்கி வைக்க இறங்கி வராமலிருப்பாரோ? இருக்கமாட்டார். எங்கள் மேல் இரக்கம் கொண்டு மனிதனாக, யேசுவாக எம் சுமைகளை இறக்கிவைக்க மண்ணிற்கு இறங்கி வந்தார்.

இவ்வாறு தம் பிள்ளைகளைத் தேடிவரும் ஆண்டவனின் ஆறுதலைப் பெற நாம் செய்ய வேண்டியது அவரிடம் போவதே. அவரைச் சந்திப்பதே. அவருடைய திருப் பாதத்தில் அமர்ந்திருந்து எம் சுமைகளை அவரிடம் சொல்லுகின்றபோது அவர் தாமே எம் சுமைகளைச் சுமந்துகொண்டு ஆறுதலின் வாழ்வை எமக்குத் தருவார்.

இந்த ஆறுதலை புதிய வாழ்வைப் பெறக்கூடியவன் யார்? இதற்கு என்ன தகைமைகள் தேவை? என்று நாங்கள் கேள்வி கேட்கலாம். இதற்கான பதில்: யார் யார் ஆண்டவரிடம் வருகிறானோ யார் யார் அவருடைய கனிவு, தாழ்மை என்ற நுகத்தை ஏற்றுக்கொள்கிறானோ அவன் ஆறுதல் பெறுவான் என்பதே. ஆண்டவனின் இந்த வார்த்தைகளை நம்பியவர்களாய் அவரைத் தேடிவரும் யாவரும் ஆறுதலைப் பெறாமல்போக மாட்டார்கள். ஏனெனில் ஆண்டவர் ஏமாற்றுபவர் அல்லர்; அவருடைய வார்த்தைகள் பொய்யானவை அல்ல. அவர் உண்மையானவர்; நேர்மையானவர். அவருடைய வார்த்தைகளும் நேர்மையானவை. படித்தவர்கள்--பாமரர்கள், ஏழைகள்—செல்வந்தர், உயர்ந்தவர்—தாழ்ந்தவர், எந்தக் குலத்தவரும், இனத்தவரும், மதத்தவரும், எந்தப் பாவிகளும் ஆண்டவரின் ஆறுதல் பெறத் தகுதியுடையவரே. எனவே கனிவும், தாழ்மையும் கொண்ட ஆண்டவனிடம் போய் ஆறுதல் பெறுவோம்.

**எம். ஆர். எஸ்.**

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் [illegible] பண்ணை [illegible] ஸ்ரீ அம்பலவாணர் விக்கினேஸ்வரர் [illegible] பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

முற்பகல் 11 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் ஓட்டுமடம் வீதி - மானிப்பாய் வீதி - ஐயனார் கோயில் வீதி – கே. கே. எஸ். வீதிகளூடாக வீதியுலா வரும் காட்சி நடைபெறும்.

(ஐ-152)

தொழுநோய்த் துறை ஆவரங்கால் மட்டுவில் வீதியில் அமைந்திருக்கும் புனித செபமாலை அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள்திருப்பலி பூசையும், திருச்சொரூப பவனியும்இடம் பெறும்.

கடந்தாண்டு இந்தப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்ததால் மேற்படி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

★ ★ ★

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வில் நாளை திங்கட்கிழமை தேர் உற்சவமும், நாளை மறுதினம் சமுத்திர தீர்த்தோற்சவமும், மறுநாள் கேணித் தீர்த்தமும் நடைபெறும்.

இத்திருவிழாவை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச்சபை, தனியார் போக்குவரத்துச்சபை இரண்டும் சகல இடங்களில் இருந்தும் விசேட போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்ளவுள்ளது. (ம-15)

## ஆங்கில தினம்

குருநகர், செப். 30

யாழ். கன்னியர் மடம் மகா வித்தியாலய ஆங்கில தின வைபவம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ். கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார்.

(ஐ 51)

## நூல் வெளியீட்டு விழாக்கள்

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்ற ஆதரவில் சோ. பத்மநாதன் எழுதிய 'ஆபிரிக்கக் கவிதை' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் பண்டிதர் க. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும்.

வெளியீட்டுரையை பேராசிரியர் சபா. ஜெயராசாவும் ஆய்வுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ், சிற்பி சி. சரவணபவன் ஆகியோரும் நிகழ்த்துவர். (ம)

★ ★ ★

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. சுதர்சனக் குருக்கள் அவர்களால் தொடுக்கப்பட்ட 'ஏகாதசி' துவாதசி விரத மகத்துவம்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தேவஸ்தான புதிய வசந்த மண்டபத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் இ. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயரும், அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவும் நிகழ்த்துவர். (ம-117)

# கொண்ட கொள்கையை இறுதி வரை மதித்து வாழ்ந்தவர் வீ. சின்னத்தம்பி

## நினைவு அஞ்சலி நிகழ்வில் உரை

சாவகச்சேரி, செப். 30

கொண்ட கொள்கையை மதித்து இறுதி வரை அதற்காகவே தன்னை அர்ப்பணித்த உண்மை மனிதன் பாரதிநேசன் வீ. சின்னத் தம்பி.

இவ்வாறு கூறினார் எழுத்தாளரும், தேவரையாளி இந்துக்கல்லூரியின் உப அதிபருமான க. நடேசு (தெணியான்).

மூத்த பத்திரிகையாளரும், சமதர்மவாதியுமான கரவையூர் வீ. சின்னத்தம்பியின் நினைவு நாள் நிகழ்வு அண்மையில் கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் கட்டைவேலி-நெல்லியடி பல நோ. கூட்டுறவுச் சங்கத்தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரை நிகழ்த்தும் போதே எழுத்தாளர் தெணியான் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்வில் எம்முடன் ஒன்றித்திருப்பவர்களது பெறுமதியை — அவர்களது காத்திரத்தை — அவர்கள் உயிருடன் இருக்கும் போது நாம் அறிவதில்லை. எம்மை விட்டு நீங்கிய பின்னரே அவர்களைப் பற்றி நாங்கள் சிந்திக்கின்றோம்.

கொண்ட கொள்கையில் குழப்பமின்றி இருப்பவனையே சமூகம் மதிக்கின்றது. அந்த வகையில் கரவைத் தம்பி என்றும், பாரதிநேசன் என்றும் அழைக்கப்படும் வீ. சின்னத்தம்பி தனது கொள்கையை விட்டுக் கொடுக்காத கொள்கை வாதியாக விளங்கியவர். இத்தகைய பெருமை மிக்க ஒருவருக்கு தமிழ்ச்சமூகம் சிந்தித்து, கௌரவிப்பு விழா எடுப்பது அவருடைய கொள்கைக்குக் கிடைத்த வெற்றியே.

1960 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் தமிழ் இலக்கியம் பேசிய கல்விமான்களை—பெரியோர்களை — பேராசிரியர்களை நாம் ஆலயங்களில் கண்டதில்லை ஆனால் 1990 இற்குப் பின்னர் யாழ்ப்பாணக் கோயில்களில் பிரசங்கம் செய்வது தான் தமிழ் என்ற நிலை உருவாகி விட்டது. இந்த நிலை மாறவேண்டும்.

இன்றைய பேராசிரியர்கள் காலத்துக்கும், நேரத்துக்கும் ஏற்ப தம்மை மாற்றுபவர்களாகவே உள்ளனர். ஆனால் பாரதிநேசன் போன்றவர்கள் இந்த விடயத்தில் இறுதி வரை உறுதியாக இருந்து, மண்ணுக்காகவே சிந்தித்து, மக்கள் வாழ்வு உயர தன்னால் இயன்ற பணி செய்துள்ளனர். இதனால் அவரது நாமம் என்றும் நிலைத்திருக்கும்—என்றார்.

வடமராட்சி தொழிற் சங்கத் தலைவர் க. தவராசா தனது உரையில் :-

பாரதிநேசன் மார்க்சிய சிந்தனையால் கவரப்பட்டவர். முதலாளி வர்க்கத்தைத்தூக்கி எறிந்து, யாவரும் சமமானவர்கள் என்பதை உணர்த்தியவர். தமது பகுதியில், சமூக மட்டத்தில் நடந்த அடக்கு முறைகளை அகற்றப்பாடுபட்டவர். 1963 காலப் பகுதியில் இடம்பெற்ற சாதி அடக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்டவர்.

அதுமட்டுமன்றி சீனா சென்று அங்கு தமிழ் மொழி வளர்த்தவர். சீன வானொலியில் தமிழ் மொழி ஒலிபரப்பை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி அதனை செயற்படுத்த முன்னின்றவர் — என்றார்

க. செல்வந்திநாதர், என். சிவபாலன், பொ. தம்பிமுத்து, எஸ். சத்தியசீலன், திருமதி ராணி சின்னத்தம்பி ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர்.

கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூட்டுறவுச்சங்கத்தின் கலாசார கூட்டுறவுப் பெருமன்றமும், மாக்சியவாத தோழர்களும் இணைந்து இந்த நினைவு நாள் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

(ஐ-7-31)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 30

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் ஏ. ரி. ஏ. தேவராஜா கலந்து கொள்வார்.

இன்று முன்னதாக நடைபெறும். காட்சிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி. க அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய வி. க அணி மோதும்.

இறுதி ஆட்டத்தில் வதிரி டயமன் வி. க. அணியும் கலட்டி ஐக்கிய வி. க. அணியும் மோதும். (ம)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 13 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கு இடம்பெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், ஹாட்லிக் கல்லூரியும் மோதுகின்றன.

(ஐ-3)

★ ★ ★

அரியாலை, செப். 30

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் 15 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்துக்கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு யாழ். மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள ஆரம்ப பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் முதல் ஆட்டத்தில் இளந்தென்றல் வி.க. அணியை எதிர்த்து ஸ்ரார் புளூஸ் வி.க. அணி மோதவுள்ளது. (ஐ-17)

11 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ், பிரதேச கலாசாரப் பேரவையின் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

# அறத்தை மையமாக வைத்து உருவான தமிழர்களின் சட்டவியல் கருத்துக்கள்

**சட்டத்தரணி சபா.ரவீந்திரன் எழுதிய 'தேசவழமை' சட்ட நூலின் வெளியீட்டு விழா அண்மையில் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மண்டபத்தில் நடை பெற்றது. விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

தேசவழமைச் சட்டமூலத்தை ஆராய்வதற்கு அதனுடன் தொடர்புடைய தமிழர்கள் வாழ்க்கைமுறை, வாழ்க்கை நெறி, வாழ்க்கைக் குறிக்கோள் ஆகியவற்றைத் தேடும்போது தமிழர் வாழ்க்கையில், முக்கியமாக இந்துக்களின் வாழ்க்கையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில அடிப்படை சமூகவியல் உண்மைகளை நாம் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

*முதலாவதாக:*

அக்கால மரபிற்கு ஏற்றவாறு சமூகத்தில் பிரிவுகள் காணப்பட்டன. சமூகமானது நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. அறிவுக்கு மேம்பாடு கொடுத்து அறிவையும் அன்பையும் ஆன்மீகத்தையும் வளர்த்த ஒரு பிரிவினர் அந்தணர் என்று அழைக்கப்பட்டனர். ஆற்றலுக்கும், ஆட்சியுரிமைக்கும், ஆளுமைக்கும் முதலிடம் கொடுத்து வீரத்தின் வழி நின்ற மற்றொரு சாரார் ஷத்திரியர் அல்லது வீரர்கள் என்று அழைக்கப்பட்டனா. உணர்வுகளுக்கு முதலிடம் கொடுத்து அழகிற்கும், அரும்பொருள்களுக்கும், ஐஸ்வர்யங்களுக்கும் சிறப்பிடமளித்து வாழ்ந்த மற்றொரு சாரார் வைஷிகர் அல்லது வணிகர் என்று பெயர் பெற்றனர். அன்றாட வேலைகளில் மூழ்கி இருந்த மற்றைய யாவரும் சூத்திரர் அல்லது பொதுமக்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொருவரினதும் செயல் அல்லது தொழிற் பண்பின் நிமித்தம அவர்கள் மேற்படி 4 பிரிவுகளுக்குள் அடங்கி இருப்பினும், மரபுவழியில் இப்பிரிவுகள் தொடர்வதாகப் பின்வந்தவர்கள் தங்களைக் குறிப்பிட்ட பிரிவுகளுக்குள் அடக்கிப் பாதுகாத்ததின் மூலம் சாதிப் பிரிவுகளைக் காலக்கிரமத்தில் ஏற்படுத்தினர். தொழிற் பண்பின் அடிப்படையில் பிரித்தமை சமூகத்தை மேம்படவைத்தது; திறமைக்கு அடிகோலியது. மரபுவழியில பிரித்துக்கொண்டமை சமூகத்தின் கட்டுக்கோப்பைச சிதைத்தது; ஆணவத்திற்கும், அகங்காரத்திற்கும், வேதனைக்கும், வெறுப்பிற்கும் வழிகோலியது.

*இரண்டாவதாக:*

மக்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையானது நான்கு காலகட்டங்களில் அடங்கியதாகக் கணிக்கப்பட்டது. முதற் பருவத்தை ஒழுக்கமாக இருப்பதற்கும், கல்வி கற்பதற்கும் பாவிக்க வேண்டியிருந்தது. அடுத்த பருவம் திருமணம் செய்யவும், குழந்தைபெறவும், குழந்தையைப் பராமரிக்கவும், தொழில செய்யவும், லௌகீக இன்பங்களில் காலம் கடத்தவும் உசிதம் எனக்கொள்ளப்பட்டது. மூன்றாவது கட்டத்தில் குழந்தைகளின் திருமணம் கண்டு, வாழ்க்கையிலிருந்து ஒதுங்குதலுக்கு ஏதுவாக ஆதனங்களை மக்கட்கீந்து கடைசிக் கட்டத்திற்கு ஆயத்தமாவதற்குப் பாதுகாக்கப்பட வேண்டியிருந்தது.

நான்காவதாகத் துறவு வாழ்க்கையின்போது மனைவியுடன் சேர்ந்து இறைசிந்தனை மிகுந்து ஒதுங்கி நிம்மதி வாழ்க்கை வாழ வேண்டும் என்று கொள்ளப்பட்டது.

*மூன்றாவதாக:*

மனித வாழ்க்கையின் நோக்குகள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைதலே என்று உணரப்பட்டது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வழிவகுப்பதே அறக்கருத்துக்கள். 'மனு' போன்ற சட்ட இயற்றுநர்கள் எவ்வெவற்றைச் செய்ய வேண்டும் என்றும் எந்தெந்த நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்களோ அதற்கு ஏற்ப வாழ்க்கையில் அந்தந்தக் கால கட்டத்தில் அந்தந்த வர்ணாஷ்ரமத்தர்கள் காரியம் இயற்ற வேண்டும் அல்லது தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுவரை கூறியதிலிருந்து முக்கியமாக மனதில் கொள்ளவேண்டியது என்னவென்றால் தமிழர்களின் வாழ்க்கைநெறி அறக்கருத்துக்களை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டது. ஆகவே தமிழர்களின் சட்டவியல் கருத்துக்களும் அன்றைய சமூக சூழலுக்கு அமைய அறத்தை மையமாக வைத்தே உருவாகியிருக்க வேண்டும் என்று நாங்கள் முடிவுக்கு வரலாம்.

சட்டம் என்று நாங்கள் பொதுவாகப் பேசும்போது, மேற்கத்திய சட்டக்கருத்தினையே குறிப்பிடுகிறோம். காரணம் சுமார் நானூற்றி ஐம்பது ஆண்டுகள் நாங்கள் மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தமையே. போர்த்துக்கீசர் கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது ஆண்டுகளும் (1505-1656), ஒல்லாந்தர் நூற்றி ஐம்பது ஆண்டுகளும் (1656-1799), ஆங்கிலேயர் நூற்றி ஐம்பது ஆண்டுகளும் (1799-1947) எம்மை ஆண்டதனால் அவர்களின் சட்டக்கருத்துக்களே எங்களை ஆட்டிப்படைத்து வந்துள்ளன. இரண்டு முக்கிய வேற்றுமைகள் மேற்கத்திய சட்டத்திற்கும் தமிழர்களின் "சமுதாய சிந்தனைக்கும்" இடையில் இருப்பதை நோக்கற்பாலது. 'தமிழர்களின் சட்டம்' என்று கூறாது தமிழர்களின் 'சமுதாய சிந்தனை' என்று குறிப்பிட்டமைக்குக காரணம் உள்ளது. மேற்கத்திய சிந்தனைப்படி 'சட்டம்' என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்ட அர்த்தம் தமிழர் சிந்தனைக்கு அந்நியமானது என்றேகொள்ளவேண்டும். அதேபோல் தமிழர்களின் அறநெறி மேற்கத்திய சட்டக்கருத்துக்களுக்கு அப்

**இ.த.விக்னராஜா**

பாற்பட்டன. இவற்றை இப்பொழுது ஆராயலாம்.

இந்திய உபகண்டத்தில் எழுந்த சமுதாய நோக்கு ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது கட்டுப்பாடுகள், கடமைகள், கட்டுபாடுகள் இவற்றிற்கு அமையவே பிறக்கிறான் என்பதே. ஆகவே, வாழ்க்கையானது கடமைகளுக்கு அமையவே வாழ வேண்டியுள்ளது. தந்தை மகற்கு ஆற்றவேண்டிய கடமைகள், மகன் தந்தைக்கு ஆற்றவேண்டிய கடமைகள், கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமைகள், மனைவி கணவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகள், அரசன் மக்களுக்கும், மக்கள் அரசனுக்கும் ஆற்றவேண்டிய கடமைகள இப்படியே சமுதாயம் என்பது கடமைகள் நிறைந்ததாகவே இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் கணித்து, ஏற்று அதற்கேற்ப வாழ்ந்தும் வந்தன. ஆனால் மேற்கு நாடுகள் (கொன்ஸ்டாண்டினோபிளின் வீழ்ச்சிக்குப் பிறகு) 15ஆம் நூற்றாண்டில் இருந்து முற்றிலும் வித்தியாசமான விதத்தில் வளர்ச்சியுற்றன. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது உரித்துக்களுடன் பிறக்கின்றான். அதனை மற்றவர்கள் எந்த விதத்திலும் பாதிப்படையச் செய்ய முடியாது என்ற சிந்தனை மேற்கத்திய நாடுகளில் மேலோங்கியது. அப்படியானால் தடியெடுத்தவன் தான் தலைவனா என்ற கேள்வி எழுந்தது. கூடிய பலம் கொண்டவனின் உரித்துக்கள் கூடிய முக்கியத்துவம் பெறுமல்லவா என்ற கேள்வி எழுந்தது. அதற்குப் பதிலளிக்கும் முகமாக பிரான்ஸிய நாட்டு தத்துவ ஞானி ரூசோ போன்றோர் சமுதாய ஒப்பந்தம் என்ற கருத்தை மக்கள் முன் வைத்தார்கள். அதாவது ஒவ்வொருவருக்கும் உரித்துக்கள் உண்டு. ஆனால் வயதுபோனபின் அல்லது நோயடைந்தபின் மனிதனால் தனது உரித்துக்களைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படுவதால் சமுதாயத்தில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் -

அதன்படி ஒவ்வொருவரும் தமது உரிமைகளில் சிலவற்றை சமுதாயத்திடம் வழங்கித் தமக்கு ஊனமோ, ஊறுபாடோ, இடையூறோ ஏற்படும்போது சமுதாயம் தம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஓர் ஒப்பந்தம் மறைமுகமாக ஏற்பட்டுள்ளது என்றும் - மனிதர்கள் பிறக்கும்போது அவர்களுக்கும் உரித்துக்கள் அனந்தம் என்றும், அவை சமுதாய நலன் கருதி சமுதாய இணக்கத்தின் பேரில, ஒப்பந்தத்தின்பேரில் குறைக்கப்பட்டுள்ளன என்றும், தத்துவார்த்த ரீதியில் காரணங்கள்காட்டி, உரிமைகளே மனிதனின் ஜீவநாடி எனற கொள்கை அடிப்படையில் தமது சமுதாய நோக்கை ஏற்படுத்திக் கொண்டனர். தமிழர்கள் கடமைகளைச் சமுதாயத்தின் அடிப்படை அம்சமாகக்கொள்ள, மேற்கு நாடுகள் உரிமைகளையே அடிப்படையாக வலயுறுத்தின. கடமைகளும் உரிமைகளும் ஒரே சல்லிக்காசின் இரு பக்கங்களே. அதாவது "என்னை இன்னொருவன் அடிக்க முடியாது, அடிவாங்காமல் இருப்பது எனது உரிமை" என்று ஒருவன் வாதாடுகிறான். "நான் அவருக்கு அடிக்கப்படாது, ஏனென்றால் அது என் கடமை" இது மற்றவர் கூறும் கூற்று. ஆக மொத்தம் ஒரே நிலையை அல்லது முடிவை இருவேறு நபர்கள் வாயிலாக வரவழைக்கும்போது, ஒருவர் உரிமையை நிலை நாட்டுபவராகவும் மற்றவர் கடமை வழி நிற்பவராகவும் காணப்படுகின்றனர். ஆனால் முன்னையவர் உரிமை பாராட்டும்போது அங்கு ஒலிப்பது அகந்தை, மிடுக்கு, அலட்சியம் ஆகிய பண்புகள். பின்னையவர் கடமைவழி நிற்கும்பொது அவரை நெறிப்படுத்தும் பண்புகள் அன்பு, அமைதி, பணிவு என்பனவாகும்.

மேற்கு நாட்டினரின் சட்டங்கள், உரிமைகளை ஊக்குவித்து உன்மத்தத்தையும் உண்டு பண்ணியுள்ளன. கிழககு நாடுகளின் கடமை நெறியோ கடந்த அரையாயிரம் ஆண்டுகளில் வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கிறது. உரிமைகள்தான் முன்நிற்கின்றன; கடமைகளை மறந்துவிட்டோம்.

ஆகவே, தமிழர் சமுதாயநோக்கு கடமைவழி நின்றன என்றால் மேலைத்தேயச் சட்டநெறி உரிமை வழிநினறன. இது முதல் வேற்றுமை.

அடுத்தது அறம் சார்ந்தது. அறம் என்பது உள்மனம் பற்றியது; மனத்தின் தாற்பரியம் பற்றியது. அறவழி நிற்றல் என்றால் மனத்துக்கண் மாசிலானாக நிற்றல் என்று அர்த்தம். வெளியில் எவ்வாறு நடந்தாலும் ஒருவனின் உள்மனம் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதே அறவழி நிற்றலின் தாற்பரியம். ஆனால், சட்டம் என்பதின் அர்த்தம் வேறு. நடத்தையை மையமாக வைத்தே உள்மனத்தை எடை போடுகிறது மேலைதேயச் சட்டம். உள்மனம் எப்படி இருந்தால் என்ன? வெளிநடத்தை அதைப் பிரதிபலித்ததா என்பதே சட்டம் கேட்கும் கேள்வி. சேர்தோமஸ் ஹொல்லண்ட் என்ற சட்டமேதை அறத்தையும் சட்டத்தையும் வேறுபடுத்த விழைந்தபோது, சட்டத்தின் நோக்கு ஆக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு அமைய வெளிநடத்தை அமைந்ததா இல்லையா என்பதை ஆராய்வதே என்றும் அறமானது செயலையும், செய்பவனின் உள்நோக்கத்தையும் ஆராய்கிறது என்றும் கூறினார். மாதிரிக்கு அமைவாக மனித சுபாவமும், நடத்தையும் இருககின்றதா என்பதை ஆராய்வதே அறம் என்றும், விதிகளுக்கு அமைவாக நடத்தை அமைவதை ஆராய்வதே சட்டம் என்றும் அவர் மேலும் கூறினார். ஆகவே, அறம் கடமைகள் பற்றியவை என்றும் சட்டம் உரித்துக்களைப் பாதுகாத்தல் பற்றியது என்றும் அவர் விளக்கிக்காட்டினார். கடமைகள் என்பன உள்மனதில் இருந்து எழுகின்றன. மனச்சாட்சியில உற்பவிக்கின்றன என்றும், உரித்துகள் சமுதாய வாழ்வின் வெளிக் கருவிகளே என்றும் அவர் விளக்கினார். ஆகவே அறமானது சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத நெறிகளையும் தன்னுள் அடக்கும் ஆனால வெளி விதிப்புகளுடன்தான் சட்டம் சம்பந்தப்படுகிறது. அதாவது மேலைதேச சட்டவியலானது வெளிச்சட்டங்களுக்கு அமைவாக மனித நடத்தை அமைகிறதா என்பதை மட்டுமே ஆராய்ந்தது. தமிழர் காத்துவந்த அறநெறி மனித மனம் ஒழுக்கத்திற்கு அமைவாக அமைந்ததா, அமைகிறதா என்பதையே ஆராய்ந்தது. ஆகவே, தமிழா நெறி மேலைத்தேச சட்டவியலுக்கு அப்பாற்பட்டதாகத் தெரியக்கூடும். ஆனால, அந்த வேற்றுமையில்தான் தமிழர்களின் தனித்துவத்தைக் காண்கிறோம்.

1.இறைமாட்சி:

தெய்வீகப் பரம்பரையில் இருந்து உதித்தவர்களே அரசர்கள் என்ற எண்ணம் மேலைநாடுகளில் அந்தக் காலத்தில் இருந்து வந்தது. நீதியின் ஊற்றும், மூலமும் அரசர்களே என்பது அவர்கள் கொள்கையாக இருந்தது. இதனால் அரசர்களின் தீர்மானங்கள் எவையாக இருந்தாலும் அவை இறைவழிவந்த தீர்மானங்களே என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. நீதிக்குப் புறம்பான தீர்ப்புக்கள் கூட, இறைவன் ஏதோ காரணத்தினால் அவ்வாறு கொடுக்க வைத்துவிட்டான் என்ற முறையில் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஓர் அரசனின் செவ்விய, அறிவுசால், தீக்கமான தீர்ப்புக்களே அவனை வானோருடன் சேர்த்துப் போற்றும் தன்மையுடையது என்றும் பாரம்பரிய அரச பதவி அல்ல என்பதே தமிழ்ப் பாங்கு. 388ஆவது திருக்குறள் பின் வருமாறு கூறுகின்றது:

*"முறைசெய்து காப்பாற்றும்*
*மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப்படும்"*

நீதி முறைப்படி செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களின் இறைவன் என்று தனியே மதிக்கப்படுவான்.

ஆகவே, மன்னன் ஒருவன் எவ்வாறு நடந்து கொண்டானோ அதன் அடிப்படையில்தான் அவனை மக்கள் மதித்தார்களே ஒழிய, வெறும் சம்பிரதாயபூர்வமாக அவர்களின் பதவியைத் தமிழ்மக்கள் ஏற்கவில்லை என்று மேற்படி குறளில் இருந்து புலனாகிறது. ஆகவேதான் மக்கள் நலனில் அரசர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். கோப்பெருஞ்சோழன் தான் செய்த தவறை உணர்ந்ததுமே சிம்மாசனத்தில் இருந்து வீழ்ந்து உயிர் நீத்தான். இப்பேர்ப்பட்ட உணர்ச்சி வசப்படவேண்டிய சந்தர்ப்பங்கள், தாம் செய்வது எல்லாமே சரி அவை யாவும் இறைன் விதித்த வழி என்று எண்ணிய அரசர்களுக்கு, எழுந்திருக்க முடியாது.

2.அறன் வலியுறுத்தல்:

முன்னர் கண்டபடி உள்மனத்தின் உயர்ச்சிக்கே தமிழர் நெறி முதலிடம் கொடுத்தது.

*மனத்துக்கண் மாசிலன் ஆதல்*
*அனைத்து அறன்*
*ஆகுல நீர பிற (34)*

ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருத்தல் வேண்டும். அதுதான் அறம். மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை உடையவை.

*அழுக்காறு அவா வெகுளி*
*இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம் (35)*

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகியதே அறமாகும்.

மேற்படி குறளகள் மனத்தூய்மையை வலியுறுத்துகின்றன. அதாவது தூய்மை இல்லாது ஆற்றும் கருமங்கள் வெறுத்தற்பாலது என்பதே தமிழ் நெறி. (வளரும்)

**யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவோர் கவனத்துக்கு!**

எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி பட்டம் பெறுபவர்களுக்கு எமது உளங் கனிந்த வாழ்த்துக்கள்

6 ஆம், 7 ஆம் திகதிகளில் பூங்கனிச்சோலைக்குள் எங்களால் புகைப் படம் எடுத்துக்கொள்வதற்கு, விசேட சலுகைகளும் விசேட ஒழுங்குகளும் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பூங்கனிச்சோலை,**
முடமாவடி.
(C/18454) T.P. - 2976

## OBITUARY

### MRS.FELICIA ERNEST

Mrs.Wilfrene Felicia Ranchitham Ernest (Nee Segarajasinghe) passed away peacefully in America. She is the dearly beloved wife of Hyacinth Macaulay Ernest, most loving mother of Harshini, Joseph, Andrew, Rashmini (all of America) and Johaan (Australia), fond mother - in - law of Pattie, Jodi, Peter Cohen and Subo. Cherished Grandmother of Sujan, Jeevan, Mackie, Rachelle and Michelle. Affectionate sister of Jeiam, Late Jeevam, Indra, Geetha, Mathura, Late Ariam, Bavani, Dr.Easwaran and Nimala. Dear sister - in - law of Juliet, Thilaga, Dr.Mrs.Rita, Edward Joseph, R.F.Thambinayagam, Ranji, Jeyam Xavier, Charmaine, M.V.Jeganathan, Late Mrs.Peace Joseph, Mrs. Gloria Johnpillai, Mrs.Grace Varnakulasinghe and Mrs. Chandra Mariampillai.

Funeral on Monday 01.10.2001 at Texas, U.S.A. Friends and relations please accept this intimation.

H.M.Ernest,
7404 Saffran street,
Austin Texas 78749,
U.S.A.

Informant:
Jeiam Segarajasinghe,
57, Vembadi Road,
Jaffna.

(92799)

**விற்பனைக்கு**

4 இஞ்சி புதிய கொங்கிறீற் கற்கள் நல்ல தரமானதும் உத்தரவாதத்துடனும் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.
விலை - 15/= மட்டுமே.
*தொடர்புகளுக்கு:*
பூங்கனிச்சோலை,
திருநெல்வேலி கிழக்கு,
T.P. - No - 2976
(C/18455)

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், மத்தியஸ்தர் பரீட்சையை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள விசேடவகுப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, 'சி' தரத்தில் சித்தியடைந்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடலும் அன்றையதினம் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# நாம் கூறும் நல்வாழ்த்துக்கள்

23.08.2001 வியாழக்கிழமை பாரிஸ் - Mo: Marx Dormoy ou La Chapelle மண்டபத்தில் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்தவர்களான

## அசோக்குமார் - கோசலாதேவி

புது மணமக்களை பதினாறு பேறுகளும் பெற்று நீடுழிகாலம் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்க மணமக்கள்! நம் நல்வாழ்த்துக்கள்!!

*வாழ்த்துவோர்:*

க.கோபாலபிள்ளை குடும்பத்தினர்,
க.தர்மசூரியர் குடும்பத்தினர்,
நா.நந்தகுமார் குடும்பத்தினர்.

*முதலாம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*
(92817)

# 90ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

மலர்வு 14 - 01 - 1927



உதிர்வு 03 - 07 - 2001

## அமரர் பொன். சோமசுந்தரம்

(பொன். சோமசுந்தரம் நகைமாடம், நவாலி)

*திதி: திரயோதசி 30.09.01*


தொண்ணூறு நாள்கள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஆறாத்துயரோடும் ஆறாத மனத்தோடும்
உங்களை நினைந்துருகி வாழும்

*'அன்னபூரணி இல்லம்'*
*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*
(92814)

*- குடும்பத்தினர்.*

# மூன்றாம் வருட இதய அஞ்சலி

மண்ணில் 08 - 04 - 1968



விண்ணில் 30 - 09 - 1998

## செல்வி மெர்லீன் மைதிலி தார்சீசியஸ்

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (இயேசு)*

அவனியின் வாழ்வு அழிந்து
ஆண்டுகள் மூன்று சென்றதம்மா!
ஆயிரமாயிரமாம் நீ கண்ட - கனவுகள்
காற்றோடு கலந்ததம்மா!
மறுபிறவி நீயெடுத்து - நாம்
மகிழ வாராயோ அம்மா?
உன் ஆன்மா சாந்திபெற
இறைஞ்சுகிறோம் இறைபதமே
நிதமும் நாம்!

*ஓம் சாந்தி!*

*6/3, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- பெரியம்மா குடும்பத்தினர்.
(92812)

# மரண அறிவித்தல்

## செல்லையா சின்னையா

மருதங்கேணி தெற்கைச்சேர்ந்த செல்லையா சின்னையா அவர்கள் நேற்று (29-09-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும், செல்லம்மா, தங்கராசா, தங்கம், பொன்னம்மா, சின்னராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வசிப்பிடத்தில் இன்று (30-09-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
*ஆசையப்பர் வீதி,*
*புலோலி தெற்கு,*
*கிராமக்கோடு.*

தகவல்:
த.நாகேஸ்வரன்
(மருமகன்)
(92822)

# விளையாட்டு......

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வலய தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

யூனியன் கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

யூனியன் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். (ம-86)

☆ ☆ ☆

வலிகாமம் வலய சங்கானை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

காலை 8.15 மணி :-

**14 வயதுப் பிரிவு**

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம் எதிர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

காட்டுப்புலம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

பிற்பகல் 2.00 மணிக்கு:-

**16 வயதுப் பிரிவு**

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்.

அராலி இந்துக் கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (ம-86)

## விழிப்புக்குழு அமைப்பு

துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்களைத் தடுக்கும் பொருட்டு நேற்றுமுன்தினம் விழிப்புக்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (ம-117)


NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2001 A/L
பரீட்சைக்குத்
தோற்றியவர்களுக்கு
வினாவிடை
வகுப்பு
இரசாயனவியல்
திரு. மகேஸ்வரன்
ஆரம்பம்:-
01.10.2001
திங்கள் காலை 7.00 மணி.
(திங்கள், புதன், வெள்ளி 7.00)
(92816)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி,
நம்பியார், நாகேஷ் நடித்த
கலங்கரை விளக்கம் (கலர்)
01-10-2001 முதல் லிடம்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2.00, 5.00 (பு.நே.)
(C/18413)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், மனிஷாகொய்ராலா,
ரகுவரன்
நடிப்பில்
முதல்வன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92796)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை தங்கம்மா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை தங்கம்மா 26.09.2001 புதன்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, குலராஜா (பி.மா.சு.சே.ப.பணிமனை), நித்தியானந்தராஜா (பனை, தென்னை அபிவிருத்திக்கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சிவயோகேஸ்வரி, சிவராஜா (ஜேர்மனி), புனிதராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வோல்டர் ஜெயராஜா (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), குணரத்தினம் (கட்டட ஒப்பந்தகாரர்), கெங்காதேவி, இராஜசிறி, தயாநிதி (ஜேர்மனி), இரத்தினவரதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியதர்சினி, கோகுலன், துதிராஜ், பாதுஜா, நியூட்டி, நிதர்சன், நிதர்சி, நிலக்ஸ்சன், தர்சிகா, சரண்யா, நிஷாளினி, நீலுஜா, அனுஜன், தற்ஜானி, துவாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01-10-2001) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.*
(92790)

தகவல்:
சி.நித்தியானந்தராஜா
சி.குலராஜா
(மகன்மார்)

## திருமதி சிவபாதசுந்தரம் சீதா

நல்லூர் வடக்கு, சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி சிவபாதசுந்தரம் சீதா 28.09.2001 அன்று காலமானார்.

அன்னார் அமரர் நடராஜா(ஆசிரியர்) - பொன்னம்மா தம்பதியரின் மகளும் சிவபாதசுந்தரத்தின் (கார் உரிமையாளர்) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சத்தியமூர்த்தி
ந.சத்தியபாலன்
(சகோதரர்கள்)

(C/18461)

## ஆறுமுகம் நடராசா

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர் ஆறுமுகம் நடராசா (லக்கி ஸ்ரோர்ஸ், ஏட்டியாந்தோட்டை) 28.09.2001 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காரைநகர் பலகாடு காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேந்திரன் (ஹொலண்ட்), தனலட்சுமி (பதுளை), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அன்னபூரணம் (ஹொலண்ட்), பாலசுப்பிரமணியம் (பதுளை), தனபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிர்மலா, பிரகாஷ், சுதர்சன், திலீபன் (ஹொலண்ட்), சிவகெளரி (லண்டன்), சிவரஞ்சினி (ஜேர்மனி), சுபாசினி, கருணாகரன், தர்சினி, பாஸ்கரன் (பதுளை), குருபரன், தயாபரன், லாவண்யா (லண்டன்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்சாலையில் வைக்கப்பட்டு இன்று (30.09.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*175/1, W.A SILVA -*
*MAWATHTHA,*
*COLOMBO - 6*
(92803)

தகவல்:
ந.புவனேஸ்வரி
(மகள்)

## திருமதி சிசிலியா பீற்றர்

நாரந்தனை மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிசிலியா பீற்றர் நேற்று (29-09-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற L.A.பீற்றரின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30-09-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*52/2, கண்டி றோட்,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(92821)

தகவல்:
சேவியர் பொலின்
வயலற்
(பேரமகள்)

## திருமதி கந்தையா இலட்சுமிபிள்ளை

தென்புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா இலட்சுமிப்பிள்ளை கடந்த வெள்ளிக்கிழமை (28-09-2001) இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், நடராசா (நில அளவையாளர்), சரஸ்வதி சிவசுப்பிரமணியம் (ஜெயகரன் ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை), ஸ்கந்தராசா (காணிப்பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), ஆனந்தராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அம்பிகாபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-09-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*புலோலி தெற்கு.*
(92819)

தகவல்:
க.ஸ்கந்தராசா (மகன்)
(காணிப்பதிவகம், கச்சேரி)
குடும்பத்தினர்.

# புலிகளைச் சந்தித்துப் பேச முஸ்லிம் பிரமுகர் குழு முயற்சி

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரமுகர்களைக்கொண்ட குழு ஒன்று விரைவில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தமது நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தினால் அது தொடர்பாகத் தம்முடன் நேரடியாகப் பேசலாம் என்று விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக ஏறாவூர் கிராம மக்கள் ஒன்றுகூடி 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மட்டக்களப்பு வதிவிடப் பிரதிநிதியை நேற்றுச் சந்தித்த இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை செய்துதருமாறு அவரிடம் கோரிக்கை விடுத்தனர். (ம-4)

## 26 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் பயணம் செய்த வான் ஜேர்மனியில் பதிவுசெய்யப்பட்டிருந்ததாகவும் -

வானைச் செலுத்திவந்த 27 வயதான பெண் ஒருவரைத் தாம் கைது செய்ததாகவும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவர்களில் 23 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் அவர்களில் ஒருவர் உடல்நிலை மோசமானதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் இதேபோன்று வாகனம் ஒன்றில் சட்டவிரோதமாக பிரிட்டனுக்குள் நுழைய முயன்ற 58 சீனர்கள் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரத்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டும் என்பதால் அடுத்த ஓரிரு தினங்களில் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் சந்தித்து இது குறித்துப் பேசுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

## 116 இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தளத்தில் வந்திறங்கினர். அவர்களை விமான நிலையத்தில் அதிகாரிகள் நேற்றிரவு வரை தடுத்து வைத்து தீவிரமாக விசாரணை செய்து வந்தனர். இன்று அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிடுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. (ம)


### விற்பனையாளர் தேவை

புத்தக விற்பனை நிலையத்துக்கு முன்அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/18456)


### யா/இந்து ஆரம்பப் பாடசாலை அறிவித்தல்

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் முடிவுகள் உத்தியோகப் பற்றற்ற முறையில் பெறப்பட்டுள்ளன. பெற்றோர் பாடசாலைக்கு வந்து அதனைப் பார்வையிடலாம்.

(C-18463) - அதிபர்.


### பொருளியற் கல்லூரி DAY CLASS

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| ECO. | வரதராஜன் | வரதராஜன் |
| ACC. | முகுந்தன் | முகுந்தன் |
| COM. | முரளி | முரளி |
| LOG. | R.P.சர்மா | R.Pசர்மா, ஜெயசுரேஸ் |
| TAM. | மீரா. | பாலா |
| H.C. | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| H.M | தரன் | தரன் |
| DR. | சுகந்தன் | சுதன் |
| GEO. | குமரன் | குமரன் |
| R.C. | வசந்தன் | வசந்தன் |

ஆரம்பம்:- யாழ்ப்பாணம் - 01.10.01 திங்கள் 8.00 (ப.நே.)
இணுவில் - 02.10.01 செவ்வாய் 8.00 (ப.நே.) (92810)

### Computer Courses

மேலதிக பிரிவுகள் இன்று ஆரம்பம்.

| பாடநெறி | காலம் (மாதங்கள்) | பதிவுக் கட்டணம் | முழுமையான பயிற்சிக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | 5 | 1,000/= | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 1,200/= | 2,500/= |

9.9.2001 ஆரம்பிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறிகளுக்குரிய பிரிவுகள் அனைத்திற்குமான அனுமதிகள் பூர்த்தியடைந்த நிலையில் மேலதிக அனுமதிகள் 16.09.2001 முதல் நிறுத்தப்பட்டிருந்தன. அனேக மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோள்களுக்கு இணங்க மேற்படி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் இன்று 30.09.2001 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பிரிவுகள் கிழமை நாட்களில் மாலை நேரவகுப்புக்களாகவும், வார இறுதி நாட்களில் காலை நேர வகுப்புக்களாகவும் நடைபெறும்.

IIS
Institute of Informatics Studies
No. 100, Clock Tower Road, Jaffna.
☎ 021-2831 Email iis@slnet.lk


## யாழ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 174 புள்ளி - திலக் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)

★ 174 புள்ளி சபாதிஸன் (நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்துக் கல்லூரி)

★ 174 புள்ளி - பி.ரேகா (மகாஜனா)

இந்தப் பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் 4257 பேர் சித்தியடைந்துள்ளனர். மாவட்ட ரீதியில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 932 |
| வவுனியா | - 241 |
| மட்டக்களப்பு | - 562 |
| மன்னார் | - 142 |
| களுத்துறை | - 95 |
| திருமலை | - 350 |
| முல்லைத்தீவு | - 137 |

யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் நாளைய தினமே கொழும்பில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலைத் துறைமுகத்தையே தேர்ந்தெடுத்துள்ளனர் எனவும் -

இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன எனவும்-

புலனாய்வுத் தகவல்கள் அண்மையில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்தே இந்தத் துறைமுகத்தின் பாதுகாப்பைப் பல மடங்குகள் அதிகரிப்பது என அரசு முடிவு செய்து, அது தொடர்பான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது என்று பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தெரிவித்தார். (ம-4)

## விகாரமா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையான விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோர் அதிகமாக வசிக்கும் இந்தப் பகுதியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்டிருப்பது பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. (ம-4)


### பிரத்தியேக வகுப்பு

2003 Maths (A/L)

01.10.2001 திங்கள் 4.00 p.m. ஆரம்பமாக உள்ளது.

(1) வரிசைமாற்றமும் சேர்மானமும்

2) நிகழ்தகவு

N.A. சயனன் (B.Sc)
வளாக வீதி,
திருநெல்வேலி. (92809)

### BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி – யாழ்நகர்

பௌதிகம்
A/L 2002
மின்புலம்
BY:- ஜெயசீலன்
ஆரம்பம்:-01. 10. 2001
MON. - 4.00 pm. (92802)

### திகழ் கல்வி நிறுவனம்

இணுவில்.

A/L 2002 Day Class
கலை, வர்த்தகம்

பொருளியல் S.ஜெயகுமார்
கணக்கீடு S.தவா
வணி.கல்வி S.பசோ
தமிழ் K.தர்மராஜா
இ.நாகரிகம் திரு.ஜெயக்குமார்
அளவையியல் S.ஜெயந்தன்

ஆரம்பம்:- -01-10-2001
திங்கள் காலை 8.30 மணி.
A/L 2002 கணித, விஞ்ஞான பிரிவு-1 வினா-விடை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. (C/184458)

### நாளை ஆரம்பம்

A/L - 2002
DAY CLASS
காலை 8 மணி
DMI
யாழ்நகர். (C/18369)


## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கின்றார்.

ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட சட்டத்தரணிகளான கே.என்.சோக்ஸி, திலக் மாரப்பன, டிரோன் பெர்னாண்டோ, தயா வல்லொல, எஸ்.எஸி.செனிவிரத்ன ஆகியோருடன் இந்த வழக்குத் தாக்கல் செய்வது குறித்து இன்று அல்லது நாளை கலந்துரையாடி சட்ட ஆயத்தங்கள் செய்யப்படும் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்தும் பொதுமக்கள் பயணம் செய்யவும், பொருள்களை அனுப்பவும் பாதுகாப்பு முன்அனுமதி பெறப்ப... டும் என்று கட்டாயப்படுத்துவது ... படை உரிமை மீறல் என்று ... லும் -

அவசரகாலச் சட்டம் ... முறையில் இல்லாத சமய... இத்தகைய விதி முறைகளை ... முறைப்படுத்த படையினரு... காரம் ஏதும் கிடையாது என... படையிலும் -

இந்த வழக்குத் தாக்க... ய்யப்பட விருப்பதாகத் தெரிவி... டது.

இதேசமயம் -

மக்கள் பயணம் செ... பாதுகாப்பு அனுமதி பெற... என்ற விதிமுறையைத் த... அமைச்சர் டக்ளஸ் தே... ஜனாதிபதியை நேரில் ... கோரிக்கை வி... இப்போது, அவர் கொள்கை அளவில் ... கொண்டு இணங்கினார் ...

இதனடிப்படையில் ... இந்த விதிமுறை நீக்கப்ப... எதிர்பார்க்கப்படுகின்றது ...

சாரப்பட ஈ.பி.டி.பி. அ... அறிக்கை ஒன்றை விடுத்த... என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் தினத்தன்றே இது தொடர்பான தமது முடிவு அறிவிக்கப்படும் என்றும்-

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறுவதற்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் நிலை காணப்படுவதால், அதனை ஆதரிப்பதா, இல்லையா என்பது குறித்து இப்போது முடிவெடுப்பது தேவையற்றது எனவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

### தொலைத் தொடர்பு (மோட்டறோல...) உரிமையாளர் சங்கம்

Telephone (Motorola) Owners' Uni...

### முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்க விசேட பொதுக்கூட்டத்தில் 2001.09.2... திகதியன்று அங்கத்தவர்களால் கோரப்பட்டதற்கமை... எமது சகல பிரச்சினைகள் பற்றி வடக்கு அபிவிருத்தி (பு... வாழ்வு, புனரமைப்பு) மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகா... அமைச்சர் மேன்மைதங்கிய கே.என்.டக்ளஸ் தேவானந்... அவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடலுக்காக எ... வரும் (02.10.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9... மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே சகலரும் இ... கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்ப... வதுடன், சோலார் (SOLAR) உரிமையாளர்கள் தொலை... இணைப்பதற்காக முதற் செலுத்தப்பட்ட பணப் பற்றுச்சீட்... க்களின் போட்டோ பிரதியுடனும் ஆடி 2001, ஆவணி 2... (Invoice) பட்டியல்களுடனும் ஏனைய தொலைபேசி (மோட்... றோலா) உரிமையாளர்களும் தங்களது ஜூலை, ஓ... (2001) பட்டியலின் (INVOICE) போட்டோ பிரதிகளைய... கொண்டு யாழ்ப்பாணம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி... காரியாலயத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கி... றோம்.

த.தேவராஜா — தலைவர்.
ஐ.நற்குணநாத... — செயலாளர்.

காங்கேசன்துறை வீதி,
மருதனார்மடம்,
இணுவில்.

(92756)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தையா

*(இளைப்பாறிய அதிபர் - முருகமூர்த்தி வித்தியாலயம், உ...*

உடுவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா (இளை... அதிபர் - முருகமூர்த்தி வித்தியாலயம், உடுவில்) நேற்று (2... சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் ... கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அ... ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உடுவில். — க.சந்திரவர்ண...
(C/18464) (இளைப்பாறிய கிராம அ...

### சின்னையா மாணிக்கம்

(முன்னாள் S.V.M. (PVT) LTD - கணக்குப்பிள்ளை...

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார்கோயிலடியை... மாகவும்கொண்ட சின்னையா மாணிக்கம் நேற்று (29.09.200... கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - வெள்ளையம்மா தம்ப... அன்பு மகனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் வனித... சித்திரா, கேதீஸ்வரன் (பிரான்ஸ்), தெய்வலட்சுமி (B.A. Final... ஆகியோரின் பாசமிகு தந்தையும் தில்லைநாதன் (சுவிஸ், சித்த... செல்வரட்ணம் (சைக்கிள் கடை) ஆகியோரின் அன்பு மா... ரம்பராகுலன், துவாரகன், பிரேம்நாத், டக்ஷன், கீர்த்திகா, துளசி... ஷாந்தி, கிருஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை... பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (30.09.2001) ஞா... கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கோம்பையன் மணல் மயான... எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை... ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1010/28, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (C/18465)

தகவ...
சீதால...
(மனை...

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2001இல் வெளியிடப்பெற்றது.